தமிழர் பொருளாதாரம்
வாரமலர்
TAMILS ECONOMY

விலை - 100/=
இதழ் - 62
24.03.2024



# அபகரிக்கப்படும் கடல்வளம்

மன்னார் குடா முத்துக்கள் உலகப்புகழ் பெற்றது எப்படி? 08

குடற்புழுத் தாக்கத்துக்கு பலியாகும் கால்நடைகள் 18

தோட்டத் தொழிலாளர்களுக்கான 1700 ரூபா சம்பள உயர்வு கண்துடைப்பா? 20

# யாழ்ப்பாணத்திலும் ஒரு சிலிக்கன் பள்ளத்தாக்கு

**பாரதி**

**பத்து வருடங்களில் பத்தாயிரம் பேரை கணினி மென்பொறியியல்துறையில் உருவாக்குவதுதான் எமது இலக்கு. இதன்மூலமாக எமது மதிப்பீட்டின்படி மாதாந்தம் ஐயாயிரம் மில்லியன் ரூபாவை அவர்களால் உழைக்க முடியும். அதாவது, ஒரு வருடத்தில் அறுபதாயிரம் மில்லியன் ரூபா எமக்குக் கிடைக்கும். அவர்கள் இங்கே இருந்துகொண்டே வெளிநாட்டுக் கம்பனிகளுக்குப் பணியாற்றுவதால் இது பலமடங்காக எமக்குக் கிடைக்கும்...**




யாழ்ப்பாணத்தை ஒரு சிலிக்கன் பள்ளத்தாக்காக Silicon Valley உருவாக்கும் நோக்குடன் இலங்கையில் தனது பணியைத் தொடங்குகியிருக்கின்றது யுனிக்கொம் - upf; Unicom Training and Innovation Center நிறுவனம். தகவல் தொழில் நுட்பத்துறையில் தொழில் தயார் பொறியியலாளர்களை உருவாக்குவதை நோக்காகக் கொண்டு தமது முதலாவது நிகழ்ச்சித் திட்டத்தை கடந்த 16ஆம் திகதி யாழ்ப்பாணத்தில் அவர்கள் தொடங்கியிருக்கின்றார்கள். 100 மில்லியன் இலங்கை ரூபாய் முதலீட்டுடன் ஆரம்பிக்கப்படும் இந்நிகழ்ச்சித் திட்டம் பத்தாண்டுகளில் 10,000 மென்பொருள் பொறியியலாளர்களை உருவாக்கி அவர்களுக்குத் தொழில் வழங்கும் நோக்கத்தைக் கொண்டது.

இதன் முதலாவது கட்டமாக 120 மாணவர்களைத்தெரிவுசெய்து அவர்களுக்கு முழுமையான புலமைப் பரிசில் ஊடாக 9 மாதகால பாடநெறியை யுனிக்கொம் வழங்கவிருக்கின்றது. சுமார் 9,25,000 ரூபா பெறுமதியான இந்தப் பாடநெறிக்காக விண்ணப்பித்திருந்த 3,500 மாணவர்களில் 120 மாணவர்கள் புலமைப் பிரிசில் மூலமாக கல்வியைத் தொடர்வதற்குத் தெரிவு செய்யப்பட்டுள்ளனர். பணம் கல்விக்குத் தடையாக இருக்கக்கூடாது என்ற அடிப்படையில் இந்தத் தெரிவு இடம்பெற்றது. திறமை, ஆர்வம், குடும்பநிலைமை என்பவற்றின் அடிப்படையில் இந்தத் தெரிவு இடம்பெற்றது.

இந்தப் பணியை மேற்கொண்டுள்ள இந்நிறுவனத்தின் இரண்டு இணை நிறுவனர்களான டபிள்யு. சாந்தரூபன் மற்றும் டொக்டர் நீல் அந்தோனிப்பிள்ளை, இவர்களுடன் இணைந்து செயற்படும் நோர்வே நாட்டின் போர்கன் பல்கலைக்கழக பேராசிரியர் தயாளன் வேலாயுதபிள்ளை ஆகியோரை "தமிழர் பொருண்மியம்" சார்பில் சந்தித்த போது முக்கியமான பல தகவல்களை அவர்கள் தெரிவித்தார்கள்.

கேள்வி - Unicom Training and Innovation Center என்ற இந்த நிறுவனத்தை உருவாக்க வேண்டும் என்ற ஐடியா உங்களுக்கு எவ்வாறு ஏற்பட்டது?

பதில் - இலங்கையின் பொருளாதார வளர்ச்சிக்கு உதவ வேண்டும் என்பதற்காகத்தான் இந்தத் திட்டத்தை நாங்கள் ஆரம்பித்தோம். இரண்டு வருடங்களுக்கு முன்னர் இங்கு உருவான பொருளாதார நெருக்கடி உங்களுக்குத் தெரியும். இந்த நாட்டில் பிறந்து வளர்ந்தவர்கள் என்ற முறையில் இந்த நிலையிலிருந்து நாடு மீள்வதற்கு நாமும் உதவ வேண்டும் என்ற நோக்கத்துடன்தான் இந்த திட்டத்தை முன்னெடுத்தோம்.

எங்களுடைய துறை கணினித் துறையாக இருந்தமையால் - அதில் நாங்கள் பல வருடங்களாக இணைந்து செயற்பட்டமையால்தான் அதனை நாங்கள் தெரிவு செய்தோம். இந்தத் துறையைப் பயன்படுத்தி இலங்கையின் பொருளாதாரத்தை முன்னேற்று வதற்காகத்தான் யுனிக்கோன் நிறுவனத்தை ஆரம்பித்துள்ளோம்.

கேள்வி - யாழ்ப்பாணத்தில் இளைய தலைமுறையினருக்கு இது எந்தளவுக்குப் பயனுள்ளதாக இருக்கும்?

பதில் - இது அவர்களுக்கு மிகவும் பயனுள்ளதாக இருக்கும். ஏனென்றால் இங்கிருந்து ஐ.ரி. துறையில் பணியாற்றுவதற்காக வெளிநாடுகளுக்குச் செல்ல வேண்டும் என்று பலர் விரும்புகின்றார்கள். எங்களுடைய கல்வித் திட்டத்தில் குறிப்பிட்ட ஒரு வீதமானவர்கள் பல்கலைக்கழகங்களுக்குத் தெரிவு செய்யப்படுகின்றார்கள். இன்னொரு பகுதியினர் தனியார் துறை கல்வி நிறுவனங்களில் படிக்கின்றார்கள். ஐ.ரி. துறையைப் பெரும்பாலானவர்கள் தெரிவு செய்வதற்குக் காரணம் அதற்குரிய சம்பளம் அதிகம்.

இதில் தெரிவு செய்யப்படுபவர்கள் இங்கிருந்துகொண்டே வெளிநாட்டு நிறுவனங்களுக்குப் பணியாற்ற முடியும். அல்லது இங்கு அவர்களது அலுவலகங்கள் அமைத்து பணிபுரியலாம். இவ்வாறான பல நிறுவனங்கள் இங்கு வந்து அலுவலகங்களை அமைத்துள்ளன.

ஏனைய துறைகளைவிட அதிகமான வேதனத்தை அவர்கள் வழங்குகின்றார்கள். வெளிநாடுகளுக்குச் சென்று குளிரிலும், தெரியாத சூழலிலும் கஷ்டப்பட்டு பணிபுரிவதைவிட அதே வேலையை இங்கிருந்து செய்யலாம். அதனால்தான் இளைஞர்கள் தங்களுடைய திறமையை வளர்த்துக் கொள்வதற்கான வாய்ப்பை நாம் கொடுக்கிறோம். அதனால், இதில் பயிற்சி பெறுபவர்கள் இங்கிருந்துகொண்டே வெளிநாடுகளில் பெறக்கூடியளவுக்கு சம்பளத்தைப் பெறுவதற்கான வாய்ப்பு உள்ளது. இங்கு படித்து பயிற்சி பெறுபவர்களுக்கு வேலைவாய்ப்பை நாம் பெற்றுக்கொடுப்போம். இதனை பரீட்சித்து சாத்தியமாகும் என்பதை கண்டறிந்தமையால்தான் இங்கு நாங்கள் களமிறங்கியிருக்கிறோம்.



கேள்வி - ஒன்பது மாதகாலத்துக்குள் இந்தப் பாடநெறியைப் பூர்த்தி செய்து தொழில் பெறுவதற்கான தகுதியுடன் மாணவர்களைத் தயார்படுத்துவது சாத்தியமானதா?

பதில் - பொதுவாக இந்தக் கல்விக்கு இரண்டு அல்லது மூன்று வருடங்கள் தேவைப்படும். அதற்குப் பின்னர் ஆறு மாதம் அல்லது ஒரு வருடம் பயிற்சி. இவ்வளவையும் முடித்த பின்னர்தான் அவர்கள் மென்பொருள் பொறியியலாளராக வரமுடியும். பலர் தமக்கு இதற்கான தகுதி இருக்கிறதா என்று தெரியாமல் இதற்குள் இறங்குகின்றார்கள். அதனால்தான் அதில் பலருக்கும் சாதிக்க முடியாமல் போகின்றது.

சரியான தகுதி உள்ளவர்களை தெரிவு செய்து இந்தத் துறையில் பயிற்றுவித்தால் ஒன்பது மாதங்களில் இதனை செய்ய முடியும் என்பதுதான் எமது கருத்து. ஒருவரை எந்தளவு திறமையானவராக இருக்கிறார் என்பதைப் பொறுத்ததுதான் அவரை எவ்வளவு காலத்துக்குள் படிப்பிக்க முடியும் என்பதைத் தீர்மானிக்கலாம். அதற்காகத்தான் நாங்கள் சரியான நடைமுறை ஒன்றைக் கடைப்பிடித்து பொருத்தமானவர்களைத் தெரிவு செய்ய முயன்றோம். வரக்கூடிய அனைவரையும் எடுத்தால் அந்த மட்டத்துக்கு அவர்களைக் கொண்டுவருவதற்கு மூன்று வருடங்கள் தேவைப்படும்.

நாங்கள் தெரிவுகளை மேற்கொள்ளும் போது 17 வயதுக்கு மேல் இருக்க வேண்டும் என்பதைப் பார்த்தோம். இரண்டாவதாக, தர்க்க ரீதியான சிந்தனை உள்ளவராக இருக்க வேண்டும் என்பதைப் பார்த்தோம். என்ன துறைக்குப் போனாலும் தர்க்க ரீதியான சிந்தனைத் திறன் அவசியம். அதேவேளை, கணினித் துறையில் இவ்வாறான சிந்தனை அதிகமாக இருக்க வேண்டும். கணினித்துறையில் இவ்வாறான சிந்தனை உள்ளவர்கள் என்ன பிரச்சினை வந்தாலும், அதனைத் தீர்க்கக்கூடியவர்களாக இருப்பார்கள். எமது தெரிவில் அதனை நாங்கள் பரீட்சித்துப் பார்த்துத்தான் தெரிவுகளை இறுதிப்படுத்தினோம்.

எமது பாடநெறி தொடர்பாக சுமார் மூன்று இலட்சம் பேர் அறிந்திருந்தார்கள். அதில் 3,500 பேர் விண்ணப்பித்திருந்தார்கள். அவ்வளவு பேரையும் நாம் பரீட்சித்துப் பார்த்து 600 பேரைத் தெரிவு செய்தோம். அந்த 600 பேரிலிருந்து தெரிவு செய்யப்பட்ட 300 பேருக்கு செயலமர்வு ஒன்றை வைத்தோம். யாழ்ப்பாணம், வவுனியா, மட்டக்களப்பு, நுவரேலியா ஆகிய பகுதிகளில் இதற்கான செயலமர்வு நடைபெறப்பது. இதன்போது அவர்களுடைய செயற்பாடுகள், மனப்போக்கு, தர்க்கரீதியான சிந்தனை, புத்திசாலித்தனம் போன்றவற்றை மதிப்பிட்டோம். இதன் அடிப்படையில் 150 பேரை நேர்முகப்பரீட்சைக்குத் தெரிவு செய்தோம். அதிலிருந்துதான் 120 பேரை நாம் இறுதியாகத் தெரிவு செய்தோம். ஒவ்வொரு மட்டத்திலும் ஒவ்வொருவரைப் பற்றியும் நாம் அறிந்துகொண்டோம்.

அந்த வகையில் இந்த 120 பேரும் தர்க்கரீதியான சிந்தனை, கணினித் துறையில் பேரார்வம், என்பவற்றுடன் அர்ப்பணிப்பாகவும் இதனை ஒன்பது மாதங்களில் செய்து முடிப்பார்கள் என்ற நம்பிக்கையில்தான் அவர்களைத் தெரிவு செய்தோம். வெறுமனே அவர்களுடைய சான்றிதழ்களை மட்டும் பார்த்து இந்தத் தெரிவை மேற்கொண்டிருந்தால் அது சாத்தியமாகியிருக்காது.

அதேவேளையில், இவர்களுக்கான தொழிற்பயிற்சியையும் ஐவெநசளொனி ஆரம்பித்திலேயே வழங்குவதற்குத் திட்டமிட்டுள்ளோம். அதாவது படிப்பித்தலையும் வேலை செய்வதையும் ஒன்றாகச் செய்துகொண்டு போகப்போறம். இதனால், படிப்பிப்பதை அவர்கள் உடனடியாகவே பிரயோகிப்பார்கள். அதனால், அது அவர்களது மனதில் பதிந்துவிடும். அதேவேளையில் நாம் கற்பிக்கவிருப்பது நாட்டில், சர்வதேசத்தில் கணினித் துறைக்கு இன்றைய காலகட்டத்தில் தேவையாக இருப்பவற்றை மட்டும்தான்.

இவை அனைத்தையும் கருத்திற் கொண்டுதான் ஒன்பது மாதங்களுக்குள் இதனைப் பூர்த்தி செய்துவிடலாம் என்று நாம் மதிப்பிட்டுள்ளோம்.

கேள்வி - ஒவ்வொரு வருடமும் இந்தப் பணியை முன்னெடுக்கவுள்ளீர்களா?

பதில் - நிச்சயமாக. ஆனால், தற்போதைய வெற்றியைப் பொறுத்தாகவே அடுத்த வருடத்துக்குரிய தெரிவுகள் அமையும். இதற்காக நாம் 100 மில்லியன் ரூபாவை ஒதுக்கியிருக்கிறோம். எம்மிடமுள்ள வசதிகளைப் பொறுத்து அடுத்த வருடத்துக்கான மாணவர் தெரிவுகள் அமையும். அனேகமாக அடுத்த வருடத்துக்கு 150 பேரைத் தெரிவு செய்யலாம் என்று எதிர்பார்க்கிறோம். புளொசம் ட்ரஸ்ட்டினால் சுமார் 10 மில்லியன் ஒதுக்கப்பட்டுள்ளது. அது வெளிமாவட்ட மாணவர்கள் இங்கு வந்து இருப்பது, உணவு போன்றவற்றுக்காக தெரிவு செய்யப்படும் மாணவர்களுக்காக வழங்கப்படும். இதனைவிட மேலும் பலரும் உதவுவதற்கு முன்வந்திருக் கின்றார்கள். அதனால், இந்த முயற்சி தொடர்ந்து முன்னெடுக்கப்படும்.

கிழக்கு மாகாணம், மலையகம் போன்ற பகுதிகளிலும் இதனை விஸ்த்தரிப்பதற்கும் திட்டம் உள்ளது. தற்போது யாழ்ப்பாத்தில் ஆரம்பித்துள்ள திட்டத்தின் பெறுபேறுகளைப் பொறுத்து அதிலிருந்து நாம் கற்றுக்கொள்வதை அடிப்படையாகக் கொண்டு இது அமையும்.

ஆனால், பத்து வருடங்களில் பத்தாயிரம் பேரை கணினி மென்பொறியியல் துறையில் உருவாக்குவதுதான் எமது இலக்கு. இதன் மூலமாக எமது மதிப்பீட்டின்படி மாதாந்தம் ஐயாயிரம் மில்லியன் ரூபாவை அவர்களால் உழைக்க முடியும். அதாவது, ஒரு வருடத்தில் அறுபதாயிரம் மில்லியன் ரூபா எமக்குக் கிடைக்கும்.

அவர்கள் இங்கே இருந்துகொண்டே வெளிநாட்டுக் கம்பனிகளுக்குப் பணியாற்றுவதால் இது பலமடங்காக எமக்குக் கிடைக்கும்.

கேள்வி - செயற்கை நுண்ணறிவின் வருகையால் எதிர்காலத்தில் கணினித் துறையில் வேலைவாய்ப்புக்கள் குறைவடையும் என்ற கருத்து ஒன்று உள்ளது. இது குறித்து உங்களுடைய பார்வை என்ன?

பதில் - கணினித்துறையில் அடுத்த 25 வருடங்களில் வேலைவாய்ப்பு இன்னும் அதிகரிக்கப்போகின்றது. செயற்கை நுண்ணறிவு அனைத்துத் துறைகளிலும் மாற்றங்களை ஏற்படுத்தும். ஆனால், வேலை வாய்ப்புக்கள் குறைவடையும் என நான் நினைக்கவில்லை. இப்போது அனைத்துமே கணினி மயமாகத்தான் இருக்கிறது. ஆனால், எதிர்காலத்தில் செயற்கை நுண்ணறிவுப் பாவனை அதிகரித்தாலும், அதனையும் மேம்படுத்த வேண்டியிருக்கும். அதற்காக மேலும் கணினித்துறையில் ஆட்கள் தேவைப்படும்.

மின்மடல் : tamilseconomy@gmail.com
தொலைபேசி : 0764438620

# யார் இதற்குப் பொறுப்பு?

வடபகுதி மீனவர் பிரச்சினை தீர்வின்றித் தொடரும் ஒரு அவலமாகியுள்ள நிலையில் தேசியம் பேசும் தமிழ்க் கட்சிகள் இவ்விடயத்தில் மௌனமாக இருப்பது கேள்விகள் பலவற்றை எழுப்பியிருக்கின்றது. போரினால் அதிகமாகப் பாதிக்கப்பட்ட தரப்புக்கள் என்றால் அதில் முதன்மையானவர்கள் கடற்றொழிலாளர்கள்தான். போர் முடிந்த பின்னரும் கடந்த பதினைந்து வருட காலத்தில் மீள முடியாதளவுக்கு நெருக்கடிகளை அவர்கள் எதிர்கொள்ள வேண்டியிருந்தது. இந்திய மீனவர்களின் அத்துமீறலும், தடைசெய்யப்பட்ட இழுவை மடிவலைகளை அவர்கள் பயன்படுத்துவதும் இதில் பிரதானமானவை.

அண்மைக்காலத்தில் தென்னிந்திய மீனவர்களின் அத்துமீறல்கள் பாரியளவில் அதிகரித்திருக்கின்றது. நூற்றுக்கணக்கான படகுகளில் கடல் எல்லையைத் தாண்டி வந்து வடபகுதியின் கரை வரையில் அவர்கள் உள்நுளைந்து கடல் வளங்களை அபகரித்துச் செல்வதுடன், அவற்றைச் சிதைத்தும் செல்கின்றார்கள். இழுவை மடி வலைகள் சர்வதேச ரீதியாகவே தடை செய்யப்பட்டவை. இந்த முறையைப் பயன்படுத்தி மீன்பிடிப்பதன் மூலம், மீன்குஞ்சுகளும் அகப்படுவதால் எதிர்காலத்தில் மீன்வளம் பாதிக்கப்படும். அத்துடன் கடல் வளங்களும் இதனால் சிதைக்கப்படுகின்றது. இலங்கை உள்ளிட்ட பல நாடுகள் அவற்றைத் தடை செய்திருப்பதற்கு அதுதான் காரணம்.

இந்தியாவிலிருந்து ஊடுருவும் கடற்றொழிலாளர்களின் படகுகள் இந்த தடைசெய்யப்பட்ட முறையைத்தான் பயன்படுத்துகின்றன. இதனைத் தடுத்து நிறுத்த வேண்டிய பொறுப்பு இலங்கைக் கடற்படைக்குள்ளது. தினசரி நூற்றுக்கணக்கான படகுகள் ஊடுருவும் நிலையில், இன்று இரண்டு படகுகளை மட்டுமே கடற்படை தடுத்து நிறுத்துகின்றது. இது வெறுமனே கண்துடைப்பான ஒரு செயற்பாடு என வடபகுதி மீனவர்கள் தெரிவிக்கும் குற்றச்சாட்டை புறக்கித்துவிட முடியாது.

கடற்றொழில் அமைச்சராக இருக்கும் டக்ளஸ் தேவானந்தா இவ்விடயத்தில் உறுதியான செயற்பாட்டை முன்னெடுக்க வேண்டும் என கடற்றொழிலாளர்கள் எதிர்பார்க்கின்றார்கள். அமைச்சர் என்பதற்கு மேலாக யாழ்ப்பாண மக்களால் தெரிவு செய்யப்பட்ட ஒருவராகவும் அவர் இருப்பதால் அவருக்கு இவ்விடயத்தில் அதிகமான பொறுப்பு இருக்கின்றது. ஆனால், அவ்வப்போது பரபரப்பான அறிக்கைகளை வெளியிடுவதற்கு அப்பால், உருப்படியான செயற்பாடுகள் எதனையும் அவர் காட்டவில்லை. இதனால், அவர் மீதான நம்பிக்கையையும் வடபகுதி கடற்றொழிலாளர்கள் இழந்துவருகின்றார்கள்.

பல கோடி ரூபா பெறுமதியான மீன்களும் கடல் வளங்களும் தினசரி அபகரித்துச் செல்லப்படும் நிலையில், வடபகுதி மீனவர்கள் பெரும்பாலான நாள்களில் தமக்குச் சொந்தமான கடலில் இறங்க முடியாத நிலை ஏற்பட்டுள்ளது. இதனைப் பாதுகாக்க வேண்டிய கடடற்படை கண்துடைப்பாக சில கைதுகளை மேற்கொள்கின்றது. கடலில் எல்லைகளைக் கண்டறிவதற்கு பல நவீன சாதனங்கள் இருக்கின்ற போதிலும், எல்லை தெரியாமல் வந்துவிட்டார்கள் என்று சொல்வதை இன்றைய காலத்தில் ஏற்க முடியாது.

# மன்னார் காற்றாலை மின் திட்டம் பறவைகளுக்கான மரணப் பொறி?

**பறவைகள் குறித்த ஆய்வாளர்கள் மற்றும் வல்லுநர்களின் தகவலின் படி மன்னார் மத்திய ஆசியாவின் பறவைகள் பறக்கும் பாதையின் ஒரு முக்கிய பகுதியாகும். உலகின் உள்ள பல நீர்பறவை இனங்களின் முக்கியமான இடம்பெயர் பாதையாக இது காணப்படுகின்றது. இந்த காற்றாலை மின் திட்டம் பறவைகளிற்கு ஒரு மரணப் பொறி என கவலை வெளியிட்டார் கொழும்பு பல்கலைகழகத்தின் விலங்கியல் மற்றும் சுற்றுச்சூழல் விஞ்ஞான பிரிவைச் சேர்ந்த பேராசிரியர் சம்பத் செனிவிரட்ன...**

மன்னாரில் அதானி குழுமம் முன்னெடுக்கவுள்ள காற்றாலை மின் திட்டம் பறவைகளுக்கான மரணப் பொறி என்ற கருத்து நிலவுவதாக இந்தியாவின் பிரபல நாளிதழான தி இந்து செய்தி வெளியிட்டுள்ளது.

மேலும்இ இந்தியாவின் அதானி கிறீன்ஸ் நிறுவனத்தினால் இலங்கையின் வடபகுதியில் முன்னெடுக்கப்படும் காற்றாலை மின் உற்பத்தி திட்டம் சர்ச்சைகளை எதிர்கொண்டுள்ளது. கரையோர பகுதிகளிலும் வாழ்வாதாரத்திற்கும் இந்த திட்டத்தினால் ஏற்படக் கூடிய பாதிப்புகள் குறித்து சூழலியாளர்களும் உள்ளுர் மக்களும் கரிசனையும் கவலையும் வெளியிட்டுள்ளனர்.



இலங்கையின் வட பகுதியில் காற்றுவளம் அதிகமாக உள்ள இரண்டு பகுதிகளில் 4.2 கோடி டொலரில் இரண்டு காற்றாலை மின்னுற்பத்தி திட்ட ததை முன்னெடுப்பதற்கு கடந்த வருடம் இலங் கையின் முதலீட்டு சபை அனுமதி வழங்கியிருந்தது.

இலங்கையின் அதிகரிக்கும் எரிசக்தி தேவைகளை எதிர்கொள்வதற்காக 2030ஆண்டுக்குள் இந்த எரிசக்திதேவையின் 70 வீதத்தை மீள்புதுப்பிக்கத்த சக்திவளங்கள் மூலம் பெறுவதற்காக அரசாங்கம் இந்தத் திட்டங்களை முன்னெடுக்கின்றது.

இந்த திட்டத்தை முன்னெடுப்பதற்கு 11.5 பில்லியன் டொலர் நிதி தேவைப்படுகின்றது. மீள்புதுப்பித்தக்க சக்திவளங்கள் என்ற விடயத்தில் இலங்கையுடன் நெருங்கிய ஒத்துழைப்பை பேணுவதற்கு இந்தியா இணங்கியுள்ளது. மீள்புதுப்பிக்கத்தக்க சக்திவளங்கள் தொடர்பான இருநாடுகளிற்கும் இடையிலான செயல்குழுவின் முதலாவது கூட்டம் கடந்த 11ஆம் திகதி நடைபெற்றது.

யாழ்ப்பாணத்தின் மூன்று தீவுகளில் மீள்புதுப்பிக்கத்தக்க எரிசக்தி வளங்களை உருவாக்குவதற்காக இந்தியா 11 மில்லியன் டொலர்களை இலங்கைக்கு வழங்கியுள்ளது. இதேவேளைஇ அதானி குழுமம் முன்னெடுக்கவுள்ள காற்றாலை மின் உற்பத்தி திட்டத்தால் பிரதேசத்தின் பல்லுயிர்தன்மைக்கு ஆபத்தை ஏற்படுத்தும் கரையோர சூழலுடன் பின்னிப்பிணைந்துள்ள அந்த பகுதி மக்களின் வாழ்வாதாரத்துக்கு பாதிப்பை ஏற்படுத்தும் என சூழலியாளர்களும் பொது மக்களும் அச்சம் வெளியிட்டுள்ளனர்.

இலங்கையின் உள்நாட்டு யுத்தம் முடிவடைந்து 15 வருடங்களாகின்ற நிலையில் இலங்கையின் ஆட்சியாளர்கள் முன்னெடுத்த பொருளாதார மீட்சி திட்டங்கள் தோல்வியடைந்த நிலையில் தமிழர் பெரும்பான்மையாக வாழும் வடக்குஇ கிழக்கில் பெருமளவு குடும்பங்கள் தங்கள் வாழ்வாதாரத்தை கட்டியெழுப்புவதில் பெரும் நெருக்கடியை எதிர்கொண்டுள்ளன.

பறவைகள் குறித்த ஆய்வாளர்கள் மற்றும் வல்லுநர்களின் தகவலின் படி மன்னார் மத்திய ஆசியாவின் பறவைகள் பறக்கும் பாதையின் ஒரு முக்கிய பகுதியாகும். உலகின் உள்ள பல நீர்பறவை இனங்களின் முக்கியமான இடம்பெயர் பாதையாக இது காணப்படுகின்றது. இந்த காற்றாலை மின் திட்டம் பறவைகளிற்கு ஒரு மரணப் பொறி

என கவலை வெளியிட்டார் கொழும்பு பல்கலைகழகத்தின் விலங்கியல் மற்றும் சுற்றுச்சூழல் விஞ்ஞான பிரிவைச் சேர்ந்த பேராசிரியர் சம்பத் செனிவிரட்ன.




**இலங்கையில் 22 கரட் (ஒரு பவுண்) தங்கத்தின் சந்தை விலை 1,71,500 ரூபா.**

**24 கரட் தங்கம் 1,87,000 ரூபாவுக்கு நேற்றைய தினம் விற்பனை செய்யப்பட்டது.**




**கேள்வி -** உண்மையிலேயே அரசாங்கம் சொல்வதைப் போல நாட்டின் பொருளாதாரம் முன்னேற்றப் பாதையில் செல்கின்றதா? மக்கள் அதனை ஏற்றுக்கொள்கின்றார்களா?

**என்.ரவிசங்கர்**
**கொட்டாஞ்சேனை.**

பதில் - அவ்வாறு மக்கள் நம்புவதாகத் தெரியவில்லை. வெரிட்டே ரிசேர்ச்சின் கேலப் பாணியிலான (Gallup style) சமீபத்திய 'தேசத்தின் மனநிலை' கருத்துக் கணிப்பின்படி, 2023 ஒக்டோபர் மாதத்தில் 9ழு ஆக இருந்த அரசாங்கம் மீதான மக்களின் அங்கீகாரம் 2024 பெப்ரவரியில் 7% ஆகக் குறைந்துள்ளது.

தற்போதைய பொருளாதாரம் சிறப்பாக உள்ளது அல்லது நல்ல நிலையில் உள்ளது என 9 சதவீதமானவர்கள் மட்டுமே மதிப்பிட்டதாகக் கணக்கெடுப்பு சுட்டிக்காட்டுகிறது. இது 2023 அக்டோபரில் 16 சதவீதமாக இருந்தது என்பது குறிப்பிடத்தக்கது.

நாட்டின் பொருளாதார நிலைமைகள் மோசமடைந்து வருவதாக 90% கருதுகின்றனர், அதேவேளை, 2023 அக்டோபரில் 66% மட்டுமே இவ்வாறான எதிர்மறையான பார்வையைக் கொண்டிருந்தனர்.

"தற்போதைய அரசாங்கம் செயல்படும் முறையை நீங்கள் அங்கீகரிக்கிறீர்களா அல்லது மறுக்கிறீர்களா?" என்ற கேள்விக்கு, பதிலளித்தவர்களில் 7% தாங்கள் ஏற்றுக்கொள்வதாகக் கூறியுள்ளனர்.

அரசாங்கம் செயல்படும் முறையை நிராகரிப்பதாகக் கூறிய சதவீதம் 85ழு ஆகும். அரசாங்கம் மீதான அங்கீகார மதிப்பீடு 2022 ஜூன் மாதத்திற்குப் பிறகு தற்போது மிகக் குறைந்த புள்ளியை எட்டியுள்ளது.

"நாட்டின் தற்போதைய பொருளாதார நிலைமைகளை சிறப்பு, நன்று அல்லது மோசம்" என மதிப்பிடுமாறு கேட்டபோது, மோசமாக உள்ளது என 91ழு கூறியுள்ளனர். இது 2023 ஜூனில் 73ழு மற்றும் 2023 அக்டோபரில் 81ழு ஆக இருந்த எதிர்மறை மதிப்பீட்டை விட அதிகரித்த மதிப்பீட்டு நிலையாகும்.

"ஒட்டுமொத்தமாக நாட்டின் பொருளாதார நிலைமைகள் மேம்பட்டு வருகின்றதா அல்லது மோசமடைந்து வருகின்றதா?" என்ற கேள்விக்கு,

பொருளாதாரம் சிறப்படைந்து வருவதாக பதிலளித்தவர்களில் 9ழு நம்புகின்றனர். இது 2023 அக்டோபரில் 8ழு ஆக இருந்தது. இருப்பினும், பொருளாதார நிலைமைகள் மோசமடைந்து வருவதாக நினைக்கும் சதவீதம் 2023 அக்டோபரில் 66% ஆக இருந்து, தற்போது 90% ஆக அதிகரித்துள்ளது.

2023 அக்டோபரில் உறுதியான கருத்தைத் தெரிவிக்காதவர்கள் தற்போது பொருளாதாரம் மோசமடைந்து வருகின்றது என்ற கருத்தை ஆமோதிக்கின்றனர். கருத்துக்கணிப்பை நடைமுறைப்படுத்தல் வழக்கமாக நடத்தப்படும் இக்கருத்துக் கணிப்பு வெரிட்டே ரிசேர்ச்சின் Syndicated Surveys கருவியின் ஒரு பகுதியாகும். வாக்களிப்பு பங்காளியாக வான்கார்ட் சர்வே (பிரைவேட்) லிமிடெட் செயற்படுகிறது.

## கேளுங்கள் தருகின்றோம்

தமிழர் பொருண்மியம் வாசகர்கள் பொருளாதாரம் உட்பட அதனுடன் தொடர்புபட்ட தங்களுடைய கேள்விகளை - சந்தேகங்களை எமக்கு அனுப்பி வைக்கலாம். அடுத்த வாரம் முதல் அதற்கான களம் திறக்கப்படுகின்றது. உங்கள் கேள்விகளை அனுப்பிவைக்க வேண்டிய மின்னஞ்சல் முகவரி -

tamilseconomy@gmail.com




| | |
|---|---|
| கத்தரிக்காய் | 180/= |
| உருளைக்கிழங்கு | 200/= |
| பச்சை மிளகாய் | 200/= |
| தக்காளி | 80/= |
| மரவள்ளிக்கிழங்கு | 120/= |
| கோவா | 300/= |
| கரட் | 350/= |
| வாழைக்காய் | 150/= |
| சின்ன வெங்காயம் | 300/= |
| பாகற்காய் | 400/= |
| வெண்டக்காய் | 200/= |
| பயற்றங்காய் | 300/= |
| பீற்றூட் | 300/= |
| முருங்கக்காய் | 800/= |
| தேங்காய் | 120/= |




**வாங்கும் விலை**

| | |
|---|---|
| அவுஸ்திரேலியன் டொலர் - | 196/= |
| கனடா டொலர் - | 221/= |
| சீன யுவான் - | 41/= |
| யுரோ - | 326/= |
| ஜப்பான் யென் - | 2.0/= |
| சிங்கப்பூர்டொலர் - | 222/= |
| ஸ்ரோலிங் பவுண் - | 381/= |
| சுவிஸ் பிராங் - | 335/= |
| அமெரிக்க டொலர் - | 299/= |

**விற்கும் விலை**

| | |
|---|---|
| ஆஸ்திரேலியன் டொலர் - | 203/= |
| கனடா டொலர் - | 230/= |
| சீன யுவான் - | 43/= |
| யுரோ - | 339/= |
| ஜப்பான் யென் - | 2.0/= |
| சிங்கப்பூர் டொலர் | 232/= |
| ஸ்ரோலிங் பவுண் - | 397/= |
| சுவிஸ் பிராங் - | 352/= |
| அமெரிக்க டொலர் - | 308/= |

# எங்கட ஆச்சி


- காரைக்கவி கந்தையா பத்மானந்தன் -



எங்கட வீட்டிலை கிணத்தோடை மாட்டுக்கொட்டில் ,ஆட்டுக்கோட்டில் , கோழிக்கூடு வைக்கல் பட்டறை எல்லாம் கிழக்கு வளவுக்கைதான் இருந்தன.

முந்தி எங்கட ஊர்வழியை பாத்தியள் எண்டால் எல்லா வீடுகளிலும் ஆடு மாட்டோட கோழியளும் வளப்பினம்.

சில கண்காணாச்சைவம் எண்டிறவை வீடுகளிலையும் கோழி வளப்பினம் . ஏனெண்டால் அது அவைக்கு ஒரு உபரி வரும்படியைக் குடுக்கும்.

ஆனா சில பெடியள் அவை கண்காணாம முட்டை சாப்பிடுறவை எண்டு பகிடி பண்ணுவாங்கள்.

எங்கட ஊரில சிலர் இருந்தவை அவை தாங்கள் மச்சம் மாமிசம் ஒண்டும் சாப்பிடுறேல்லை சைவம் ஆனா முட்டை மட்டும் சாப்பிடுவம் எண்டுவினம் அவையை நாங்கள் முட்டைச்சைவம் எண்டு சொல்லுறனாங்கள்.

உந்தச் சைவ ஆக்கள் எண்ட தும்தான் ஞாபகம் வருகுது எங்கட ஊரில இருந்த ரெண்டொரு சைவ ஆக்கள் மச்சம் மாமிசம் சாப்பிட மாட்டினம் ஆனால் வெத்திலை போயிலை பீடி கள்ளு பாவிப்பினம் கேட்டா அட விசரா இதுகள் மூண்டும் மரத்திலைதானே இருந்து வருகுது .

நாங்கள் மரக்கறி சாப்பிடுகிறமாதிரி இதுகளையும் எடுக்கிறம் எண்டுவினம் .

எங்கட ஆச்சி கோழி வளக்கிறதை ஒரு தொழில் மாதிரியே செய்தவ. கிழக்கு வளவுக்கை ஒரு கோழிக்கூடு இருந்தது. நாலு பக்கமும் கம்பிவலை அடிச்சு கூரை கிடுகால மேய்ஞ்சு ரெட்டைத்தட்டில இருக்கும். ஆறு கால்கள் இருக்கும்.மேல்தட்டுக்கும் கீழ்த்தட்டுக்கும் ஒவ்வொரு பலகைக்கதவு இருக்கும்.

கோழி ஏறிப்போறதுக்கு பூவரசம் தடி சாத்தி வைச்சிருக்கும். சிலர் கம்பிவலை பாவிக்காம வடலி மட்டையால வரிஞ்சு இருப்பினம். வடலி மட்டையில நிறைய கருக்கு இருக்கிறதால பூச்சி பூரான் பாம்பு ஒண்டும் கூட்டுக்குள்ளை பூராது.

இன்னுஞ் சிலர் உதை மாதிரி சின்னக் கூடுகளை மரங்களிலை கட்டிப்போட்டு கோழியள் ஏறிப்போறதுக்கெண்டு ஒரு மரமும் சத்தாருக்கு சாய்ச்சு வைப்பினம்.

இன்னுஞ்சிலர் நிலமட்டத்திலை அடுக்களை சைசில உப்பிடி மட்டையால வரிஞ்ச கூடு வைச்சிருப்பினம்.

நிலத்துக்கு உமி போட்டு விடுவினம். கோழியள் பகல் முழுக்க மேய்ஞ்சு போட்டு பொழுதுபட கூட்டில வந்து அடையுங்கள் சில கோழியள் முத்தத்தில நிக்கிற மரத்தில ஏறிப்படுத்திடுங்கள்.

கொஞ்சம்குழுப்படிக்கோழியளை பாப்பா.. பாப்பா…எண்டு குழப்படிகாரப் பெடியளை அணைக்கிற மாதிரி மெல்லக் கூப்பிட்டு அணைச்சுத்தான் அடைக்க வேணும் .

எங்கட ஆச்சியிட்டை ஒரு பதினைஞ்சு இருபது பேடுகளும் அஞ்சாறு சேவல்களும் நிண்டது. அதில ஒரு சேவலை வைரவருக்கு நேந்து விட்டுடுவா.

முந்தி எங்கடை ஆக்கள் வீட்டில ஆருக்கும் வருத்தம் வாதை வந்தால் ஆடு மாடு கோழியளுக்கு வருத்தம் வந்தால் மாற வேணும் எண்டு போட்டு இல்லாட்டில் ஏதும் பிக்கல் பிடுங்கல் வரப்படாது எண்டு போட்டு உப்பிடி சேவல்களை கோயில்களுக்கு நேந்து விடுகிறவை .

பேந்து கொண்டு போய் கோயில்களிலை விட்டுப்போட்டு வந்துவிடுவினம் . நேந்து விட்ட கோழியளோடை ஒருத்தரும் சேட்டை விடாயினம் அதுகளைக் களவெடுத்தால் இல்லாட்டில் திண்டால் பாவம் எண்டுவினம் . எண்டாலும் சில இடங்களிலை கோழிக்கள்ளர் இல்லாட்டில் குடிகாரர் உந்த நேந்து விட்ட கோழியளையும் பிடிச்சுக் கொண்டு போடுவாங்கள் …

நேர்ந்து விடுதல் எண்டது எங்கட சமயத்தின்ரை நேர்த்திக் கடன்களில ஒண்டு . சிறு தெய்வ வழிபாடுகளில ஆடு, கோழியளை கடவுளுக்கு எண்டு நேந்துவிட்டு வீட்டிலேயே வளத்துப்போட்டு பேந்து அந்தக் கோயில் திருவிழாவில் அதுகளை வெட்டிப் படைச்சுத தின்னுவினம் ..

பெரு தெய்வ வழிபாடு எண்டால் உந்த நேந்ததுகளை கொண்டுபோய் கோவில்களில விட்டுப்போட்டு வருவினம் . உப்பிடி சாமிக்கு நேந்து போட்டு உதுகளை வளக்கிறதால வலு கவனமா வளப்பினம் .

அதுகளுக்கு ஒழுங்கா சாப்பாடு வைக்கிறதோட வருத்தம் வதை வாராமல் பாக்கிறதோட வேற மிருகங்களாலை ஏதும் கரைச்சல் வராமலும் பாப்பினம் . இதே போல முந்தி உந்த பெரு தெய்வ வழிபாட்டிலை சின்னப் பிள்ளையளை பொம்பிளையளை நேந்து விடுகிற பழக்கமும் இருந்தது எண்டு அப்பு சொல்லுறவர் .

அப்படி நேந்து விடுகிற பெண்டுகளை தேவரடியாள் எண்டவை எண்டும் பேந்து உது திரிபடைஞ்சு தேவடியாள் எண்டு வந்தது எண்டும் சொல்லுறவர் .

ஒரு பெண் தேவனுக்கு அடியவள் எண்ட பொருளிலதான் தேவரடியாள் எண்டு சொன்னவை .

முந்தி அந்தக்காலத்தில கன பெண்டுகள் இறைவனுக்கே தாலிக்கட்டிக்கொண்டு நித்திய சுமங்கலிகளாக கோவில்களில திருவிழாக் காலங்களில் நாட்டியமாடிக்கொண்டும், பாட்டுப்பாடிக்கொண்டும் கோயில்லுக்குப் போற சனங்களை சந்தோசமா வைச்சிருந்தவை .

உவையை தேவதாசியள் எண்டும் சொல்லுறவை .பேந்து மற்ற நாட்களில கடவுளுக்குத் தொண்டு செய்துக்கொண்டு இருந்தவை பேந்து பின்னாளிலை உவையை வலுக்கட்டாயமா விபச்சாரம் செய்ய வைச்சு கேவப்படுத்தினவங்கள்

எண்ட அப்பு கடைசியில தேவடியாள் எண்ட சொல்லே விலைமாதரை இல்லாட்டில் நடத்தைப் பிழையான பெண்டுகளை குறிக்கிற ஒரு வசவுச் சொல்லா மாறிவிட்டது எண்டார். ஆனாலும் எங்கட ஊரில சும்மா குழப்படி செய்யிற பெட்டையளை எந்த விகல்ப்பமும் இல்லாம எங்கட பெண்டுகள் அவளவை நல்ல தேவடியாள் எண்டு சொல்லுவினம் எண்டுவார் ….

## வரி விளம்பரம்

## classified advertisement




### வேலைவாய்ப்பு

தமிழ்த் தட்டச்சுத் தெரிந்த பக்க வடிவமைப்பாளருக்கான முழுநேரப் பகுதிநேர (இரவு) வேலைவாய்ப்பு உள்ளது. அனுபவத்திற்கு ஏற்ப சம்பளம் தீர்மானிக்கப்படும். தொடர்புகளுக்கு - 0777277009

--------------------------------------

எழுதுமட்டுவாழ் பகுதியில் அமைந்துள்ள இயற்கை விவசாயப் பண்ணையில் தங்கி நின்று வேலைசெய்யக்கூடிய ஆண் தோட்டக்காரர் தேவை. உணவு, தங்குமிட வசதி செய்துதரப்படும்.

தொடர்புகளுக்கு - 0766482303

--------------------------------------

நாவற்குழியில் உள்ள விருந்தினர் விடுதி (Hotel) ஒன்றில் அறை பராமரிப்பாளர், சுத்திகரிப்புத் தொழிலாளி, உணவு பரிமாறுபவர் ஆகிய வேலைவாய்ப்புகள் உள்ளன. சம்பளத்திற்கு மேலதிகமாக ஊக்குவிப்புக் கொடுப்பனவுகளும் வழங்கப்படும். தொடர்புகளுக்கு 0777276818

--------------------------------------

யாழ் இந்துக் கல்லூரிக்கு அண்மையில் அமையவுள்ள உள்ளூர் உற்பத்திப் பொருள் விற்பனை அங்காடியில் விற்பனை உதவியாளர் வேலைவாய்ப்பு உள்ளது. ஆண், பெண் இருபாலாரும் விண்ணப்பிக்கலாம்.

தொடர்புகளுக்கு 0767403814

--------------------------------------

நாட்டின் பல பாகங்களில் வியாபாரத்தினைக் கொண்டுள்ள நிறுவனத்தின் யாழ்ப்பாணத்தில் அமைந்துள்ள அலுவலகத்திற்குக் கணக்கு உதவியாளர் (Accounts Assistant) வேலைவாய்ப்பு உள்ளது. கணக்குவழக்குப் பராமரித்தல், வங்கி நடவடிக்கைகள் மேற்கொள்ளல் என்பன வேலைகளாக இருக்கும். அனுபவம் வாய்ந்த கணக்காளரின் கீழ் வேலைசெய்யும் வாய்ப்பு.

தொடர்புகளுக்கு 0777299386

--------------------------------------

யாழ்ப்பாணத்தில் ஆரம்பிக்கப்படவுள்ள **Software and Web Developement** நிறுவனத்திற்குச் சகல நிலைகளுக்குமான ஆள்சேர்ப்பு ஆரம்பிக்கப்பட்டுள்ளது. அனுபவம் உள்ளவர்கள் மற்றும் பயிற்சிபெற விரும்புபவர்கள் உங்களின் சுயவிபரக் கோவையினை **onlinew4u@gmail.com** எனும் மின்னஞ்சல் முகவரிக்கு அனுப்பிவைக்கவும். (மின்னஞ்சலின் **subject** இல் **Software and Web Developement** குறிப்பிட்டு அனுப்பவும்)

--------------------------------------

விளம்பரம் சேகரிப்பாளர் **(Advertisement Collector)** முழுநேர, பகுதிநேர வேலைவாய்ப்பு - அடிப்படைச் சம்பளம் மற்றும் மேலதிகக் கொடுப்பனவு வழங்கப்படும். தொடர்புகளுக்கு 0777277009

--------------------------------------

வாகனச் சாரதிக்கான வேலைவாய்ப்பு. **light vehicle driving license - B, C, G1** சாரதி அனுமதிப்பத்திரம் உள்ளவர்கள் விண்ணப்பிக்கலாம்.

தொடர்புகளுக்கு 0770684905

--------------------------------------

### SALE விற்பனைக்கு

தரமான சுவையான குறிஞ்சிக் கோப்பி விற்பனைக்கு உண்டு. மலையகத்தில் இருந்து பெறப்பட்ட தரமான கோப்பியில் இருந்து சிறப்பாகத் தயாரிக்கப்பட்ட யாழ்ப்பாணச் சுவையுடனான கோப்பிகள் 100g Tinகளில் பெற்றுக்கொள்ளலாம்.

தொடர்புகளுக்கு 0764438620

--------------------------------------

கறுவாக் கன்றுகள் விற்பனைக்கு உள்ளன. யாழ்ப்பாணத்துச் சீதோஸ்ணத்தில் வளரக்கூடிய கறுவாக் கன்றுகள். 2 கன்றுகள் அடங்கிய பை 150 ரூபாய் மட்டுமே. தொடர்புகளுக்கு - 0766482303

--------------------------------------

வீட்டுத் தோட்ட விதைகள் விற்பனைக்கு உள்ளன - 0763352782 - கிளிநொச்சி

--------------------------------------

சுத்தமாகத் தயாரிக்கப்பட்ட நவதானியங்கள் அடங்கிய சத்துமா விற்பனைக்கு உண்டு. - 0760225528 மன்னார்.

--------------------------------------

புரோட்டின் நிறைந்த கச்சான் லட்டுக்களைப் பெற்றுக்கொள்வதற்கு - 0777421896 கிளிநொச்சி.

--------------------------------------

அனைத்து வகையான வடகங்கள் மற்றும் மூலிகைப் பொருட்களைப் பெற்றுக் கொள்ள - 0779151820 கிளிநொச்சி.

--------------------------------------

பாரம்பரிய முறையில் தயார் செய்யப்பட்ட சுத்தமான தேங்காய் எண்ணெயைப் பெற்றுக் கொள்வதற்கு நீங்கள் அழைக்க வேண்டிய இலக்கம். - 0766982219 யாழ்ப்பாணம்.

--------------------------------------

மூலிகைகளால் தயாரிக்கப்படும் சுத்திகரிப்புப் பொருட்கள் மற்றும் சவர்க்காரங்களைப் பெற்றுக் கொள்வதற்கு - 0773972309 மன்னார்.

--------------------------------------

யாழ்ப்பாணத்தில் தயாரிக்கப்படும் பத்திக் துணிகளையும் ஆடைகளையும் கொள்வனவு செய்வதற்குத் தொடர்புகொள்ளவும் - 0776126448

வாரஇதழ்...

தமிழர் பொருண்மியம் வாரமலர் TAMILS ECONOMY

| கறுப்பு வெள்ளை விளம்பரம் | |
| --- | --- |
| வரி விளம்பரம் | இலவசம் |
| பெட்டி விளம்பரம் | 600.00 |
| ¼ பக்கம் | 3,500.00 |
| ½ பக்கம் | 6,000.00 |
| முழுபக்கம் | 10,000.00 |

| வர்ண விளம்பரம் | |
| --- | --- |
| பெட்டி விளம்பரம் | 900.00 |
| ¼ பக்கம் | 5,000.00 |
| ½ பக்கம் | 9,000.00 |
| முழுபக்கம் | 16,000.00 |

தமிழர் பொருண்மியம் வாரஇதழில் உங்கள் விளம்பரங்களை வெளியிட

0777 27 69 49 | 076 443 8622

#68, குறோசெட் வீதி, யாழ்ப்பாணம்.

**மன்னாருக்குப் பெருமை சேர்க்கும் முத்துக்குளிப்பு - 01**

# மன்னார் குடா முத்துக்கள் உலகப்புகழ் பெற்றது எப்படி?



நிஷாந்தி பிரபாகரன்

> "பரவர்கள் சிப்பி களைச் சேரிப்பதற்காக இடுப்பைச் சுற்றி பையொன்றைக் கட்டிக்கொள்வார்கள். நீரில் மூழ்கும் போது சரியான இடம் தென்பட்டதும் பரபரப்பாக முத்துக்களைச் சேகரித்து இடுப்பில் கட்டிச் சென்ற பை போன்ற வலையினுள் போடப்படும். அதேவேளை தோணியில் இருப்பவர் முத்துக் குளிப்பவர்களைக் கண்ணும் கருத்துமாகக் கண்காணித்துக் கொண்டிருப்பார்கள்…"

உலகில் முத்துக்குளிக்கும் இடங்கள் மிகச் சிலவேயுள்ளன. இலங்கையின் மன்னார், மலபார் ஆகிய கடலோரங்களில் பரதவர்கள் இதில் தனியுரிமை பெற்றவர்களாக சிறந்து விளங்கியிருக் கிறார்கள். சங்க காலத்திற்கு முன்பிருந்தே மன்னார் வளைகுடாவில் எடுக்கப் பெற்ற முத்துக்கள் கிரேக்க, ரோமானிய நாடுகளில் மிகவும் புகழ்பெற்று விளங்கின. இலங்கையின் பல்வேறு கடற்கரை நகரங் களும், பொற்கேணி, மறிச்சுக்கட்டி, சிலாவத் துறை என்பனவும் முத்துக்குளித்துறையாக இருந்திருக்கின்றன.



கிமு 6 ஆம் நூற்றாண்டில் இலங்கை கடல்சார் வர்த்தக உறவுகளைக் கொண்டிருந்தது. மேலும் எங்களிடம் கடல்சார் வர்த்தகத்திற்காகப் பயன்படுத்தப்பட்ட புகழ்பெற்ற கடற்படைத் துறைமுகங்கள் இருந்தன, குறிப்பாக கடல்சார் "பட்டுப் பாதை"க்காக கிரேக்க - ரோமன், சீனா, இந்தியா, பெர்சியா ஆகிய நாடுகளில் இருந்தவர்கள் தங்கள் வெளிநாட்டு வர்த்தகத்திற்காகப் பயன்படுத்தினார்கள். அதனால் இலங்கை புதிய பொருளாதார உறவுகளை ஏற்படுத்த முடிந்தது.

பழங்காலத்தில் மன்னார் முத்துக்க ளுக்கும், மீன்பிடிக்கும் பெயர் பெற்றது. விலைமதிப்பற்ற கற்கள் மற்றும் மசாலாப் பொருட்களுடன், முத்துக்கள் தென்னிந்தியா மற்றும் இலங்கையின் முக்கிய ஏற்றுமதி பொருட்களாக இருந்தன, ரோமானிய நீண்ட தூர வர்த்தகத்தின் உச்சக்கட்டத்தின்




போது, அதாவது பேரரசு முழுவதும். பண்டமாற்றுப் பொருட்களைப் பயன்படுத் துவதற்குப் பதிலாக, ரோமானியர்கள் வெள்ளி மற்றும் தங்க நாணயங்கள் மற்றும் குறிப்பிடத்தக்க அளவுகளில் பணம் செலுத்தினர்.

கி.பி முதல் நூற்றாண்டில் வாழ்ந்த அநாமதேய எழுத்தாளரால் எழுதப்பட்ட இந்தியப் பெருங்கடல் துறைமுகங்கள் பற்றி கிரேக்க மொழியில் எழுதப்பட்ட கிரேக்க- ரோமன் ''Periplus of the Erythraean Sea'' மன்னார் குறிப்பிடப் பட்டுள்ளது.

**முத்துக்குளிப்பு முத்தரிப்புத்துறை**

உலகில் முத்துக்குளிக்கும் இடங்கள் மிகச் சிலவேயுள்ளன. இலங்கையின் மன்னார், மலபார் ஆகிய கடலோரங்களில் பரதவர்கள் இதில் தனியுரிமை பெற்றவர்களாக சிறந்து விளங்கியி ருக்கிறார்கள். எங்கள் கடலில் வளமான முத்துக்கள் இருந்தன. நினைவெட்டாக் காலத்திலிருந்தே எங்கள் முன்னோர்கள் கண்டெடுத்த இயற்கைச் சொத்து அது.




கொற்கையிலும், மன்னாரிலும், பூம் பட்டினத்திலுமாக வருடத்திற்கு ஒரு போகம் முக்குளித்தோம். மேற்கிலிருந்து வீசியக் காற்று கொற்கைக்கும் கீழைக்காற்று மன்னாருக்குமாக முத்தைக் கொட்டிக் கொடுத்த அந்த இயற்கையின் சொத்துக்கு எங்கள் முன்னோர்கள் அதிபதிகளாக இருந்தனர்.

முத்துக்குளித்தல்; (Pearl hunting) அல்லது முத்தெடுத்தல் அல்லது முத்து வேட்டை என்பது கடலின் ஆழமான பகுதிகளில் வசிக்கும் முத்துச் சிப்பி மற்றும் நன்னீர் மட்டிகள் (freshwater pearl mussel) எனப்படும் மெல்லுடலிகளிலிருந்து முறையான மூழ்குதல் பயிற்சி மூலம் முத்தினை எடுத்து கடலின் மேற்பரப்பிற்குக் கொண்டு சேர்க்கும் முறையாகும். முத்துச்



சிப்பிகளுக்கு நான்கு வயதாக இருக்கும் போது பெறப்படுவனவற்றிலேயே அதிசிறந்த முத்துக்கள் காணப்படும். நல்ல தரமான அரிய வகையான மூன்று அல்லது நான்கு முத்துகளை பெறுவதற்கு கிட்டத்தட்ட ஒரு டன் சிப்பிகள் சேகரிக்கப்பட வேண்டும்.

"பேருலகத்துமே எந் தோன்றி சீருடை விழுச் சிறப்பின், விளைந்து முதிர்ந்த விழு முத்தின், இலங்கு வளையிருஞ்சேரிக் கட் கொண்டிக் குடிப்பாக்கத்தும், நற்கொற் கையோர்" என்கிற மதுரைக் காஞ்சி பாடலின் மூலம் வீரமிக்க பரதவர்கள் முத்துக்களையும் சிப்பிகளையும் கடலில் மூழ்கியெடுத்தார்கள் என்பதை புரிந்து கொள்ள முடிகிறது.

பரவர்கள் சிப்பிகளைச் சேரிப்பதற்காக இடுப்பைச் சுற்றி பையொன்றைக் கட்டிக்கொள்வார்கள். நீரில் மூழ்கும் போது சரியான இடம் தென்பட்டதும் பரபரப்பாக முத்துக்களைச் சேகரித்து இடுப்பில் கட்டிச் சென்ற பை போன்ற வலையினுள் போடப்படும். அதேவேளை தோணியில் இருப்பவர் முத்துக் குளிப்பவர்களைக் கண்ணும் கருத்துமாகக் கண்காணித்துக் கொண்டிருப்பார்கள்.

மேலே வந்தவர் தோணியில் இருப்பவரிடம் தான் சேகரித்த முத்துச் சிப்பிகளை ஒப்படைத்து விட்டு சிறிது ஓய்வு எடுத்தபின் மீண்டும் முத்துக் குளிக்கக் குதித்துவிடுவார். முத்துக் குளிக்கும் பணி முடிவுற்றதும் சிப்பிகளைக் கடற்கரையில் கொட்டி ஏலத்தில் விற்பனை செய்வார்கள். சில நாட்களின் பின்பு சிப்பிகளை ஒவ்வொன்றாகத் திறந்து நன்றாகக் கழுவி முத்துக்களை வெளியில் எடுப்பார்கள். இவ்வாறு சேகரிக்கப்படும் இயற்கை முத்துகள் விலை மதிப்பு மிக்க ஒன்பது இரத்தினங்களுள் ஒன்றாக மதிக்கப்படுகிறது.

பரவர்கள் மற்றும் அவர்களின் பாரம்பரிய மீனவ மரபினரின் தொழிலை சில வகைகளாக பிரிக்கலாம். அவை, துணி விற்போர், கலம் செலுத்துவோர், முத்துச்சிப்பிகள் குளிப்போர், சங்குகள் குளிப்போர், துணிகள் கட்டுக்கட்டுவோர், ஆமைகளைப் பிடிப்போர், கடற்பன்றிகளைப் பிடிப்போர், சுறா மற்றும் பிறமீன்களைப் பிடிப்போர், பல்லக்குச் சுமப்போர், தலைமைக்காரர்களின் குற்றேவலர், நண்டுகள் பிடிப்போர், என பல தொழில்களையும் கடலை மையமிட்டு செய்து வந்தவர்கள் பாரம்பரிய மீனவர்கள். ஆனால் பாரம்பரிய மீன் பிடிச்சமூகங்களின் பிரதான தொழிலாக எக்காலத்திலும் இருந்திருக்கக் கூடிய மீன்பிடி, உப்பு விளைவித்தல் போன்ற தொழிலுக்கு இருந்த முக்கியத்துவத்தை விட, அவர்கள் தொழிலின் ஒரு பகுதியாக இருந்து கடலில் மூழ்கி எடுத்து வந்த முத்துக்கு இருந்த முக்கியத்துவம் வேறு எதற்கும் இல்லை.

செல்வாக்குமிக்கோரின் கழுத்துக்களை அலங்கரிக்கும் அணிகலனாக மட்டுமல்லாமல் கிரேக்கர்களையும், உரோமானியர்களையும், அராபியர் களையும், போர்ச்சுக்கீசியரையும், பின்னர் டச்சுக்காரர்களையும் இறுதியாக வெள்ளை யர்களையும் என அவர்களின் ஏக போக சுரண்டல் சந்தையில் முத்து ஒரு பிரதான பொருளாக இருந்ததாலுமே முத்து பேசப்பட்டது.

தென்னிந்தியாவைத் தவிர இந்தியக் கடலோரங்களில் வேறு எங்கும் இயற்கை கடல் முத்து எடுக்கப்படவில்லை. இந்தியக் கடலோரங்களில் பரவாலாக சங்குக்குளித்தல் நடைபெற்றதே தவிற முத்துகுளித்தல் நடைபெறவில்லை. முத்து வளம் இந்திய தீபகற்பத்தின் வேறெந்த கடல் பகுதிகளிலும் இருந்தமைக்கான சான்றுகளும் இல்லை. முத்துக்குளித்தல் நடைபெற்ற ஒரே இடம் தமிழக கடலோரங்களிலும் இலங்கையின் மன்னார் கடலோரத்திலும்தான் என்பது அறயக்கிடைக்கிற செய்தி.

பெர்ஷியா, இந்தோனேஷியா, ஜப்பான், போன்ற இடங்களில் முத்துக்குளிப்பு நடந்திருந்தாலும் இவைகளுக்கு பன்னெடுங்காலத்திற்கு முன்பே தமிழகத் தின் கொற்கை கடலோரத்திலும் மன்னார் குடாவிலும் முத்தெடுத்ததற்கான சான்றுகள் உள்ளன. தமிழக முத்துக்கள் ஆதிகாலம் தொட்டே எடுக்கப்பட்டு வருவதாக கால்டுவெல் பிஷப்பும், எம்.அருணாச்சலம் என்ற மூத்த ஆய்வாளரும் கணிக்கிறார்கள்


ரிப்ளூஸ் என்கிற நூலில் கொற்கை யில் முத்துக்குளித்தலில் பாண்டியர்களுக்காக அவரின் கைதிகள் ஈடுபட்டதாக குறிப்பிடுகிறார். சந்திரகுப்த மௌரியரின் அரசவையில் கிரேக்க தூதுவராக இருந்த மெகஸ்தனிஸ் இலங்கையில் முத்துக் குளித்தல் நடந்ததையும் இந்தியாவைக் காட்டிலும் தங்கம், முத்துக்களை அதிகளவில் உற்பத்தி செய்யும் நாடாக இலங்கை இருந்ததையும் குறிப்பிடுகிறார்.

பெர்ஷியன் கடல்பகுதிகளில் நடந்த முத்துக்குளித்தல் தொடர்பான குறிப்புகளும் உள்ளன. பெர்ஷியன் கடல் பகுதியில் கிடைத்த முத்துக்கள் ஆர்ம்ஸ் (Ormus) என்றும் தமிழக, மன்னா ரிலும் கிடைத்த முத்துக்கள் "கீழை முத்துக்கள்" என்றும் குறிப்பிட்டுள்ளார். இந்த கீழை முத்துக்கள் பெர்ஷிய முத்துக்களை விட கிரேக்கத்திலும், ரோமாபுரியிலும் புகழ் பெற்றிருந்ததாகவும் தெரிகிறது.

**முத்தின் வகைகள்**

**ஆணி**
**கனதாரி**
**மக்கை**
**மடக்கு**
**குறவில்**
**களிப்பு**
**பீசல்**
**குறல்**
**தூள்**
**ஓட்டு முத்து**

மன்னார் வளைகுடாவினது முத்துப் படுக்கைகள் (முத்துச்சிப்பிகள் காணப்படுகின்ற இடங்கள்) தொடர்பாக



கி.பி. 6ஆம் நூற்றாண்டின் முற்பகுதியி லுள்ள வரலாற்றுப் பதிவுகளிலும் குறிப் பிடப்பட்டுள்ளன.

போக் 1888 என்பவரின் கருத்தின்படி ஒல்லாந்தரால் 1661, 1667, 1746, 1748, 1749, 1753, 1754, 1768ம் ஆண்டுகளில் இங்கு முத்துக்குளிப்பு இடம் பெற்றுள்ளது. கௌடில்யரின் கருத்துப்படி கி.மு 3ம் நூ ற்றாண்டுகளில் இங்கிருந்து பெறப்பட்ட முத்துக்கள் இந்தியாவில் கொடிகட்டிப் பறந்த மகரப் பேரரசுப் பகுதிக்கு கொண்டு செல்லப்பட்டு அங்கிருந்து ஏனைய நாடுகளுக்கு கொண்டு செல்லப்பட்டன என்று அறிய முடிகிறது. 13ம் நூற்றாண்டில் காயல் பட்டினம் சிறந்த பொருளாதார சிறப்புடன் விளங்கியுள்ளது. மன்னாரில் பெறப்பட்ட முத்துக்கள் இங்கு கொண்டு செல்லப்பட்டு ஏனைய நாடுகளுக்கு ஏற்றுமதி செய்யப்பட்டுள்ளன.

அடுத்தவாரமும் முத்துக்குறிப்போம்...



# வலுவடையும் இலங்கை ரூபாய்!

**உள்ளூர் மற்றும் சர்வதேச சூழ்நிலைகளை கருத்தில் கொள்ளும்போது எதிர்காலத்தில் வெளிநாட்டு நாணயத்திற்கு எதிராக குறிப்பாக அமெரிக்க டொலருக்கு எதிராக இலங்கை ரூபாயின் மதிப்பு என்னவாக இருக்கும்? அவ்வாறு அதை கணிக்கும் போது கருத்தில் கொள்ள வேண்டிய காரணிகள் என்ன?**








AGS. சுவாமிநாதன் சர்மா
பட்டயக்கணக்காளர்,
வரி முகாமைத்துவ ஆலோசகர்

2023 இல் இலங்கை ரூபா ஒரு ருளு டொலருக்கு எதிராக சுள.363 ஆக இருந்தது. தற்போது சுமார் சுள.303ஃஸ்ரீ ஆகக் குறைந்துள்ளது. ருளு டொலருக்கு நிகரான இந்த ரூபாய் மதிப்பு அதிகரிப்பால் இலங்கையில் பொது மக்களுக்கும் வரி செலுத்துவோருக்கும் என்ன நன்மைகள் ஏற்படும் என்பதை இக்கட்டுரையில் பார்ப்போம்.

உள்ளூர் மற்றும் சர்வதேச சூழ்நிலைகளை கருத்தில் கொள்ளும்போது எதிர்காலத்தில் வெளிநாட்டு நாணயத்திற்கு எதிராக குறிப்பாக அமெரிக்க டொலருக்கு எதிராக இலங்கை ரூபாயின் மதிப்பு என்னவாக இருக்கும்? அவ்வாறு அதை கணிக்கும் போது கருத்தில் கொள்ள வேண்டிய காரணிகள் என்ன?

இலங்கை ரூபாய் (LKR) உட்பட எந்தவொரு நாணயத்தின் எதிர்கால மதிப்பையும் கணிப்பது இயல்பாகவே கடினமானது, நிச்சயமற்றது. பரிவர்த்தனை விகிதங்களை பாதிக்கக்கூடிய பல சிக்கலான மற்றும் ஒன்றோடொன்று இணைக்கப்பட்ட பல காரணிகள் உள்ளன. இது துல்லியமான முற்கணிப்பிற்குச் சவாலானது.

கருத்தில் கொள்ள வேண்டிய சில தகவல்கள் பின்வருமாறு:

LKR மதிப்பைப் பாதிக்கும் உள்ளூர்க் காரணிகள்:

- இலங்கைப் பொருளாதாரம்: இலங்கைப் பொருளாதாரத்தின் வளர்ச்சி வீதம், பணவீக்க நிலைகள் மற்றும் கொடுப்பனவுச் சமநிலை உட்பட இலங்கைப் பொருளாதாரத்தின் ஒட்டுமொத்த ஆரோக்கியம் தாக்கத்தை ஏற்படுத்தும். குறைந்த பணவீக்கத்துடன் கூடிய வலுவான பொருளாதாரம் மற்றும் நேர்மறை செலுத்தும் சமநிலை பொதுவாக வலுவான நாணயத்திற்கு வழிவகுக்கின்றது.
- நாணயக் கொள்கை: வட்டி விகிதங்கள் மற்றும் அந்நிய செலாவணி தலையீடுகள் போன்ற இலங்கை மத்திய வங்கியின் (CBSL) பணவியல் கொள்கை முடிவுகள் தாக்கத்தை ஏற்படுத்தலாம்.
- அரசியல் ஸ்திரத்தன்மை: அரசியல் ஸ்திரத்தன்மை மற்றும் நிச்சயமற்ற தன்மை ஆகியவை முதலீட்டாளர்களின் நம்பிக்கையை, மதிப்பைப் பாதிக்கலாம்.

LKR மதிப்பை பாதிக்கும் சர்வதேச காரணிகள்:

- உலகளாவிய பொருளாதார நிலைமைகள்: வட்டி விகிதங்கள், பண்டங்களின் விலைகள் மற்றும் முதலீட்டாளர் இடர் பசி உள்ளிட்ட உலகளாவிய பொருளாதாரத்தின் ஒட்டுமொத்த ஆரோக்கியம் LKR இன் மதிப்பைப் பாதிக்கலாம்.
- அமெரிக்க டொலர் வலிமை: அமெரிக்க டாலர் என்பது உலகின் இருப்பு நாணயம், மற்ற நாணயங்களுடன் ஒப்பிடும்போது அதன் வலிமை அல்லது பலவீனம் மதிப்பைப் பாதிக்கலாம்.
- வெளிநாட்டு முதலீடு: இலங்கையில் வெளிநாட்டு முதலீட்டு வரவு மற்றும் வெளியேற்றங்களின் அளவு மதிப்பைப் பாதிக்கலாம்.

இவை LKR இன் மதிப்பை பாதிக்கக் கூடிய சில காரணிகள் மற்றும் அவற்றின் ஒப்பீட்டு முக்கியத்துவம் காலப்போக்கில் மாறலாம் என்பதை நினைவில் கொள்வது அவசியம். எனவே, அமெரிக்க டாலர் அல்லது வேறு எந்த நாணயத்திற்கும் எதிரான எதிர்கால LKR மதிப்பை கணிப்பது உறுதியாக முடியாது. எவ்வாறாயினும் இந்தப் பல்வேறு காரணிகளைப் பற்றி தொடர்ந்து அறிந்துகொள்வதன் மூலமும் பொருளாதார முன்னேற்றங்களைக் கண்காணிப்பதன் மூலமும் LKR இன் மதிப்பில் ஏற்படக்கூடிய தாக்கங்களை நீங்கள் நன்கு புரிந்து கொள்ள முடியும்.


அண்மைக் காலங்களில் அமெரிக்க டொலருக்கு (USD) நிகரான இலங்கை ரூபாய் (LKR) குறிப்பிடத்தக்க உயர்வைக் கண்டுள்ளது. மாற்று வீதம் 2023 இல் ஒரு அமெரிக்க டாலருக்கு 363 ரூபாய் தற்போது சுள.303ஃஸ்ரீ ஆக உள்ளது. இந்த மாற்றம் மேலோட்டமாக சாதகமாகத் தோன்றினாலும் இலங்கையில் உள்ள பொது மக்களுக்கும் வரிசெலுத்துவோருக்கும் இது வழங்கக்கூடிய சாத்தியமான நன்மைகள் மற்றும் குறைபாடுகளைப் புரிந்துகொள்வது மிகவும் முக்கியமானது.

**சாத்தியமான நன்மைகள்:**

- குறைக்கப்பட்ட இறக்குமதிச் செலவுகள்: பலவீனமான அமெரிக்க டொலருக்கு இலங்கைக்கான மலிவான இறக்குமதியாக சாதகமாக அமைந்து காணப்படுகின்றது. இது எரிபொருள், மருந்து மற்றும் உணவு போன்ற அத்தியாவசியப் பொருட்களின் விலை குறைவதற்கு வழிவகுக்கும். இது நுகர்வோருக்கு பயனளிக்கும்.
- மேம்படுத்தப்பட்ட கடன் தாங்கும் திறன்: இலங்கையில் கணிசமான அளவு வெளிநாட்டுக் கடன்கள் அமெரிக்க டொலரில் உள்ளன. பலவீனமான அமெரிக்க டொலர் இந்த கடனுக்கு சமமான இலங்கை ரூபாயை குறைக்கின்றது. அரசாங்கத்திற்கான திருப்பிச் செலுத்தும் சுமையை எளிதாக்குகிறது மற்றும் பிற பகுதிகளுக்கான வளங்களை விடுவிக்க பெரிதும் உதவியாக அமையும்.

இருப்பினும், சாத்தியமான குறைபாடுகளையும் கருத்தில் கொள்வதும் அவசியம்:

- குறைக்கப்பட்ட ஏற்றுமதி போட்டித் திறன்: பலவீனமான ரூபாயானது இலங்கை ஏற்றுமதிகளை உலக சந்தையில் அதிக




விலையுடையதாக மாற்றலாம். இது ஏற்றுமதி சார்ந்த வர்த்தகங்களை பாதிக்கக்கூடியது மற்றும் அவர்களின் போட்டித்தன்மைக்கு தீங்கு விளைவிக்கும்.

•இறக்குமதி செய்யப்பட்ட பணவீக்கம்: இறக்குமதி செலவுகள் குறையக்கூடும் என்றாலும், உள்நாட்டு உற்பத்தி பொருட்கள் மற்றும் சேவைகளின் விலை உயரும் உலகளாவிய பொருட்களின் விலைகள் அல்லது இலாப வரம்பைப் பராமரிக்க உள்ளூர் வணிகங்களின் சரிசெய்தல் போன்ற காரணிகளால் இன்னும் உயரக்கூடும். இது பொருளாதாரத்தில் பணவீக்க அழுத்தங்களுக்கு வழிவகுக்கும்.

•பணப்பரிமாற்றங்களை சில சமயங்கள் பாதிக்கலாம்: பலவீனமான ரூபாயின் காரணமாக வெளிநாட்டில் பணிபுரியும் இலங்கையர்கள் குறைவான பணப்பரிமாற்றங்களை தாயகத்திற்கு அனுப்பலாம். இது வெளிநாட்டு நாணய வரவுகளை பாதிக்கும் மற்றும் இந்தப் பணம் அனுப்பும் பணத்தை நம்பியிருக்கும் குடும்பங்களைப் பாதிக்கலாம்.

ஒட்டுமொத்தமாக, டுமுசு இன் வளர்ச்சி பொது மக்களுக்கும் வரிசெலுத்துவோருக்கும் சாத்தியமான நன்மைகள் மற்றும் குறைபாடுகளின் கலவையான தன்மையினை வழங்குகின்றது. இது குறைந்த இறக்குமதிச் செலவுகள், மேம்படுத்தப்பட்ட கடன் வாங்கக்கூடிய தன்மை மற்றும் சுற்றுலாத்துறையில் ஒரு ஊக்கத்தை ஏற்படுத்தலாம். எனினும் ஏற்றுமதி போட்டித்திறன் குறைவதற்கான சாத்தியக்கூறுகள், இறக்குமதி செய்யப்பட்ட பணவீக்கம் மற்றும் ஊக்கமளிக்கப்படாத பணப்பரிமாற்றங்கள் ஆகியவற்றைக் கருத்தில் கொள்வது மிகவும் முக்கியமானது.

பொருளாதார நிலப்பரப்பு சிக்கலானது. ரூபாய் மதிப்பின் உண்மையான தாக்கம் பல்வேறு காரணிகளைப் பொறுத்தது என்பதைக் கவனத்தில் கொள்ள வேண்டியது அவசியம். பொருளாதாரத் தரவு, அரசாங்கக் கொள்கைகள் மற்றும் உலகப் போக்குகளைக் கண்காணிப்பது வளர்ந்து வரும் சூழ்நிலையையும் அதன் சாத்தியமான விளைவுகளையும் புரிந்துகொள்வதற்கு முக்கியமானது.

### கூடுதல் பரிசீலனைகள்:

தனிப்பட்ட சூழ்நிலைகள், வருமான அளவுகள் மற்றும் செலவு முறைகளைப் பொறுத்து ரூபாய் மதிப்பின் தாக்கம் மாறுபடலாம். குறுகிய கால நாணய ஏற்ற இறக்கங்களை பொருட்படுத்தாமல், இலங்கையின் பொருளாதார சவால்களை எதிர்கொள்வதற்கும் நிலையான வளர்ச்சியை உறுதி செய்வதற்கும் நீண்ட கால பொருளாதார கொள்கைகள் மற்றும் கட்டமைப்பு சீர்திருத்தங்கள் அவசியம்.

இலங்கையில் உள்ள பொது மக்கள் மற்றும் வரி செலுத்துவோர் வெளிநாட்டு நாணயத்திற்குக், குறிப்பாக அமெரிக்க டொலருக்கு எதிரான ரூபாயின் மதிப்பில் இருந்து தங்களைப் பாதுகாத்துக் கொள்வதற்கான சில எதிர்கால உத்திகள் பின்வருமாறு:

### குறுகிய கால சேமிப்பிற்கு:

• டொலர் மதிப்பிலான சொத்துக்களில் முதலீடு செய்யுங்கள்: இதில் டொலர் மதிப்பிலான வங்கி வைப்பு, அரசாங்கப் பத்திரங்கள் அல்லது பரஸ்பர நிதிகள் ஆகியவை அடங்கும். ரூபாய் மதிப்பு உயரும்போது இந்த முதலீடுகள் மதிப்பு அதிகரிக்கும். இருப்பினும், அவை ரூபாய் மதிப்பிலான சொத்துக்களை விட குறைவான திரவமாக இருக்கலாம் மற்றும் நாணய பரிமாற்ற அபாயங்களுடன் வரலாம்.

•அந்நியச் செலாவணியின் இருப்பை அதிகரித்தல்: இலங்கை ரூபாவினை டொலருக்கு மாற்றுவதன் மூலமும், அவற்றை ரொக்கமாகவோ அல்லது டொலர் மதிப்பிலான வங்கிக் கணக்கில் வைத்திருப்பதன் மூலமோ செய்யலாம். இருப்பினும், இந்த மூலோபாயம் பணத்தை வைத்திருப்பது தொடர்பான அபாயங்கள் மற்றும் பிற நாணயங்களுடன் ஒப்பிடும்போது டொலரின் தேய்மானத்திற்கான சாத்தியக்கூறுகளை வெளிப்படுத்துகின்றது.

### நீண்ட கால சேமிப்பிற்கு:

•பன்முகப்படுத்தப்பட்ட (போர்ட்/போலியோவில்) முறைகளில் முதலீடு செய்யுங்கள்: இதில் பங்குகள், பத்திரங்கள், ரியல் எஸ்டேட் மற்றும் பிற சொத்து வகுப்புகளின் கலவையும் அடங்கும். நாணய ஏற்ற இறக்கங்கள் உட்பட, எந்த ஒரு சொத்து வகுப்பிலிருந்தும் ஏற்படும் இழப்புகளின் அபாயத்தைக் குறைக்க பல்வகைப்படுத்தல் உதவும்.

•அந்நிய செலாவணி வருமானம் சம்பாதிக்கும் சொத்துக்களில்/கம்பெனிகளில் முதலீடு செய்யுங்கள்: தங்கள் வருவாயில் கணிசமான பகுதியை அந்நிய செலாவணி வருமானமாக ஈட்டிக் கொள்ளக்கூடிய நிறுவனங்களின் பங்குகள் இதில் அடங்கும். இந்த முதலீடுகள் உயரும் டொலரால் பயனடையும்.

### பிற உத்திகள்:

•டொலரின் சராசரி செலவினைக் குறைத்தல்: மாற்று விகிதத்தைப் பொருட்படுத்தாமல், வழக்கமான இடைவெளியில் டொலர் மதிப்பிலான முதலீட்டில் ஒரு நிலையான தொகையை முதலீடு செய்வது இதில் அடங்கும். இது காலப்போக்கில் முதலீட்டுச் செலவை சராசரியாகக் கணக்கிடவும், நாணய ஏற்ற இறக்கங்களின் தாக்கத்தைக் குறைக்கவும் உதவும்.

•ஹெட்ஜிங்: இது நாணய ஏற்ற இறக்கங்களால் ஏற்படக்கூடிய இழப்புகளை ஈடுசெய்ய நிதிக் கருவிகளைப் பயன்படுத்துவதை உள்ளடக்குகின்றது. ஹெட்ஜிங் சிக்கலானது மற்றும் அனைத்து முதலீட்டாளர்களுக்கும் ஏற்றதாக இருக்காது.

• நாணய ஏற்ற இறக்கங்களில் இருந்து உங்களை முழுமையாகப் பாதுகாத்துக் கொள்ள திட்டவட்டமான ஒரே வழி எதுவுமில்லை என்பதை நினைவில் கொள்வது அவசியம். இருப்பினும், மேலே குறிப்பிட்டுள்ள உத்திகளின் கலவையைப் பயன்படுத்துவதன் மூலம், அபாயங்களைத் தணிக்க நீங்கள் உதவலாம் மற்றும் உயரும் அமெரிக்க டொலரில் இருந்து பலனடையலாம்.

+94-777-802-900 |
Email: swaminathan@agsarma.com

அடுத்த வாரம் தொடரும்....

# கோடிக்கணக்கான ரூபா பெறுமதியான மீன்வளம் தினசரி அபகரிக்கப்படுகிறது

## வடபகுதி கடற்றொழிலாளர் இணைய செயலாளர் முகமத் ஆலம் நேர்காணல்



**இந்திய மீனவர்களின் அத்துமீறலால் வடபகுதி மீனவர்கள் தமது வாழ்வாதாரங்களை இழந்துள்ளார்கள். கோடிக்கணக்கான ரூபா பெறுமதியான மீன்கள் தினசரி வடக்கிலிருந்து தமிழக மீனவர்களால் அபகரித்துச் செல்லப்படுகின்றது. இது தொடர்பாக வடபகுதி கடற்றொழிலாளர் இணையத்தின் செயலாளர் முகமத் ஆலம் வழங்கிய நேர்காணல்.**

பார்த்தீபன்

**கேள்வி** - இந்திய மீனவர்களின் அத்துமீறல் காரணமாக வடபகுதி மீனவர்கள் பெரும் பொருளாதார இழப்புக்களை சந்தித்து வருகின்றார்கள். இந்தப் பிரச்சினை தீர்வின்றித் தொடர்வதற்கு யார் காரணம்? இலங்கை அரசாங்கமா? இந்திய அரசாங்கமா?

**பதில்** - இந்திய மீனவர்களின் இந்த ஆக்கிரமிப்பு பல வருடங்களாகத் தொடரும் ஒரு விடயமாக இருக்கின்றது. இதனைக் கட்டுப்படுத்த வேண்டிய பொறுப்பு இலங்கை அரசாங்கத்துக்கே இருக்கின்றது. ஏனெனில் இறைமையுள்ள ஒரு நாடென்ற வகையில், மற்றொரு நாட்டின் மீனவர்கள் உள்நுளையும் போது அவர்களைக் கட்டுப்படுத்துவது அரசாங்கத்தின் கடமை. இலங்கை அரசின் கடற்படை பாதுகாப்புப் பணியில் ஈடுபடுத்தப்படுகின்றார்கள். அவர்களையும் மீறி இந்திய மீனவர்கள் உள்ளே வருகின்றார்கள் என்றால், அதற்குப் பொறுப்புக் கூற வேண்டியவர்களாக இலங்கை அரசாங்கம்தான் இருக்கின்றது.

**கேள்வி** - இந்திய மீனவர்களின் இவ்வாறான அத்துமீறல் காரணமாக வடபகுதி கடற்றொழிலாளர்கள் அண்மைக்காலத்தில் தொழில் ரீதியாக, பொருளாதார ரீதியாக எவ்வாறான பிரச்சினைகளை எதிர்கொள்கின்றார்கள்?

**பதில்** - இந்திய மீனவர்களின் அத்துமீறல் வடபகுதி மீனவர்களின் ஜீவனோபாயத்திலும், தொழிலிலும் பாரிய தாக்கங்களை ஏற்படுத்தியிருக்கின்றது. அவர்களின் வாழ்வாதார, ஜீவனோபாய மற்றும் அனைத்துவகையான கட்டமைப்புக்களையும் இது பாதித்திருக்கின்றது. அவர்களுடைய பல கோடி ரூபா பெறுமதியான மீன்பிடி உபகரணங்கள், கடலில் இருக்கின்ற பல கோடிக்கணக்கான ரூபா பெறுமதியான வளங்களையும் இவ்வாறு அத்து மீறி வரும் இந்திய மீனவர்கள் அழித்திருக்கின்றார்கள். அதாவது, இதனால் மிகப் பெரிய இழப்பு இந்த நாட்டுக்கும், மீனவர் சமூகத்துக்கும் ஏற்பட்டிருக்கின்றது.



**கேள்வி** - அமைச்சர் டக்ளஸ் தேவானந்த இதற்கான தீர்வு ஒன்றை அண்மையில் முன்வைத்திருந்தார். அதாவது, கடற் சாரணர் பிரிவு ஒன்றை அமைப்பதன் மூலம் இந்த அத்துமீறலை கட்டுப்படுத்தக்கூடியதாக இருக்கும் என்று தெரிவித்திருந்தார். இது குறித்து உங்கள் கருத்து என்ன?

**பதில்** - மீனவர்கள் விடயத்தில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்த நீண்டகாலமாகவே அக்கறையுடன் செயற்பட்டு வருகின்றார் என்பதை காணக்கூடியதாக இருந்துள்ளது. பழைய பஸ்களை கடலில் போட்டு அதன் மூலமாக இந்திய மீனவர்களின் அத்துமீறலைக் கட்டுப்படுத்துவதற்கு முயன்றார். அதன் பின்னர் இந்திய மீனவர்களின் அத்துமீறல்கள் குறித்து அவர் அக்கறையாக கருத்துக்களை வெளியிட்டு வருகின்ற போதிலும், மீனவர்களின் ஏனைய விடயங்களில் அவர் போதிய கவனம் செலுத்தவில்லை. உள்ளூரில் தடை செய்யப்பட்ட இழுவை மடித்தொழிலை நிறுத்துவது போன்றவற்றில் அவர் கவனம் செலுத்தவில்லை. இந்திய இழுவை மடிப் படகுகள் விடயத்தில் அவர் கவனம் செலுத்துவது புரிகிறது.

கடல் சாரணியர் என்ற ஒரு அமைப்பின் மூலமாக இதனைத் தடுப்பது என்பது சாத்தியமற்றது. ஏற்கனவே ஒரு தீர்மானம்

இருக்கின்றது. 2015 ஆம் ஆண்டு இந்திய - இலங்கை மீனவர் பேச்சுவார்த்தையில் ஒரு உடன்பாடு எட்டப்பட்டது. இரு தரப்பு மீனவர்களையும் பயன்படுத்தி கடலை ரோந்து செய்வது என்பதுதான் அந்தத் தீர்மானம். இரண்டு நாட்டு மீனவர்களையும், இரண்டு நாட்டு அரசுகளையும் கொண்டுதான் இதனைச் செய்ய வேண்டும் என்றுதான் அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஆயுதம் தாங்கிய கடற்படை ஒன்று இலங்கை அரசிடம் இருக்கும் போது, ஒரு தரப்பை மட்டும் உள்ளடக்கியதாக சாரணர் என்ற அமைப்பை உருவாக்கி வெறும் கையுடன் சென்று செயற்படுவது முடியாது. பாரிய படகுகளில் வரும் இந்திய மீனவர்களை இவர்கள் எவ்வாறு தடுக்கப்போகின்றார்கள்? இது சாத்தியமாகுமா? இது வெறுமனே இரு தரப்பு மீனவர்களையும் மோத விடும் செயற்பாடாக மட்டுமே முடிந்துவிடும். இரண்டு நாடுகளுக்கும் இடையில் காணப்படும் தமிழ் என்ற வகையிலான அந்த உறவு இந்தச் செயற்பாட்டினால் முறிந்து நாசமாகிவிடலாம். இவ்வாறு பல பிரச்சினைகள் இதில் உள்ளது.

**கேள்வி** - எல்லையைத் தாண்டி வருவது சட்டவிரோதம், அவ்வாறு வந்தால் கைது செய்யப்படலாம் என்ற அச்சம் இருக்கின்ற போதிலும், இந்திய மீனவர்கள் துணிந்து வருவதற்கு காரணம் என்ன?

**பதில்** - தமது நாட்டில் இருக்கக்கூடிய வளங்களை அவர்கள் ஏற்கனவே அழித்துவிட்டார்கள். அதனால், அவர்களுடைய கடற்பகுதிக்குள் மீனினம் இல்லாத ஒரு நிலை ஏற்பட்டுவிட்டது. இவ்வாறான நிலையில்தான் இலங்கையின் கடற் பகுதிக்குள் இருக்கக்கூடிய மீன்களைப் பிடிப்பதற்காக அவர்கள் இங்கு வருகின்றார்கள். அத்துடன் இலங்கைக் கடற்பகுதிக்குள் இருக்கக்கூடிய கடல் வளங்களைக் கொண்டு செல்வதும் அவர்களுடைய நோக்கங்களில் ஒன்றாக இருக்கின்றது.

**கேள்வி** - இந்திய மீனவர்களுடைய அத்துமீறலைத் தடுத்து நிறுத்துவதற்கு உங்களுடைய அடுத்த கட்ட நடவடிக்கை என்ன?

**பதில்** - இரு தரப்பு மீனவர்களுக்கும் இடையிலான பேச்சுவார்த்தை மூலமாகவே இந்தப் பிரச்சினைக்குத் தீர்வைக் காணமுடியும் என நாம் நம்புகின்றோம். இந்த அத்துமீறலைத் தடுத்து நிறுத்துவதற்கான அழுத்தங்களை இந்தியாவுக்குக் கொடுப்பதற்கான வலு இலங்கை அரசாங்கத்துக்கு இல்லை. எனவே, மீனவர்களுக்கு இடையிலான புரிந்துணர்வின் மூலமாகவே இந்தப் பிரச்சினைக்குத் தீர்வைக்காணக்கூடியதாக இருக்கும்.

தமிழக மீனவர்கள் ஒன்றைப் புரிந்துகொள்ள வேண்டும். இங்குள்ள தமிழ் பேசும் மக்கள் - தொப்புள் கொடி உறவுகள் - இந்திய நாட்டின் மீது ஒரு எதிர்பார்ப்போடு உள்ள மக்கள் அவர்கள் என்பதைப் புரிந்துகொள்ள வேண்டும். இங்குள்ள வளங்கள் இங்குள்ள மக்களின் பயன்பாட்டுக்குத் தேவை என்பதையும் அவர்கள் புரிந்துகொள்ள வேண்டும். இதனை வெறுமனே அரசியலாக்குவதற்கோ, அல்லது அரசியல் காரணங்களுக்காக இரு நாட்டு மக்களின் உறவுகளையும் முறித்துக்கொள்ள இங்குள்ள வடபகுதி மக்கள் விரும்பவில்லை. இவ்வாறான நிலையில் தமிழக மீகவர்களும் சிந்திக்க வேண்டும் என்பதே எமது எதிர்பார்ப்பு.





பேச்சுவார்த்தை என்று வரும்போது இரு தரப்பு மீனவர்களும் விட்டுக்கொடுத்துப் பேசுவதற்குத் தயாராக இருக்கின்றார்கள். ஆனால், தமிழகத் தரப்பில் இருந்துதான் சந்தேகமான பார்வை தொடர்ந்தும் இருக்கின்றது. ஏனெனில் தொடர்ச்சியான பேச்சுவார்த்தைகளை நீண் காலமாக நாம் நடத்திவந்திருக்கின்றோம். ஆனால் அடிமடிவலை என்ற தொழில்முறையிலிருந்து மாறுவதற்கு அவர்கள் முன்வைக்கின்ற நிபந்தனைகள் ஏற்றுக்கொள்ளத்தக்கதாக இல்லை. இரண்டு வருடம் தாருங்கள், நான்கு வருடம் தாருங்கள் இந்த தொழிழ் முறையிலிருந்து நாங்கள் மாறிக்கொள் கிறோம் என்ற விடயத்தை முன்வைத்துப் பேசுவதால் இந்தப் பேச்சுவார்த்தைகளில் தீர்வைக் காண முடியாத ஒரு நிலை தொடர்கிறது.

ஆனால், நாம் தமிழக மீனவர்களுடன் பேசுவதற்குத் தயாராக இருக்கின்றோம். ஆனால், அவர்கள் ஒரு உறுதியான நிலையில் இருக்க வேண்டும். இழுவை மடித் தொழிலை நிறுத்துவதற்கு அவர்கள் முதலில் தயாராக வேண்டும். அதன்பின்னர் அவர்களுடன் பேசுவதற்கான செயற்பாடுகளை முன்னெடுப்பதற்கு நாங்கள் தயாராக இருக்கின்றோம். அவர்கள் பயன்படுத்துகின்ற தொழில்முறைதான் பிரச்சினையே தவிர எமக்கும் அவர்களுக்கும் இடையில் வேறு பிரச்சினைகள் எதுவும் இல்லை.

மீனுக்கு எல்லை இல்லை என்று சொல்வார்கள். மீன் செல்லும் திசையில்தான் மீனவர்களும் செல்கின்றார்கள். ஆனால், பலாத்காரமாக வரமுடியாது. இந்த வளங்களை எவ்வாறு பங்கிட்டுக்கொள்வது என்பது தொடர்பாகப் பேசுவதற்கு நாங்கள் தயாராகவே இருக்கின்றோம். அதனை அரசாங்க மட்டத்தில் பேசி நாங்கள் தீர்த்துக்கொள்ளலாம் முதலில் இந்த இழுவை மடித் தொழிலை நிறுத்த தாம் தயார் என அவர்கள் அறிவித்தால், வட பகுதி மீனவர்கள் தயாராகவே இருக்கின் றார்கள் அவர்களுடன் பேசுவதற்கு.

**எத்தனை வழிகள் இருந்தாலும் இன்றும் எமது வீட்டிற்கு சுத்தமான காட்டுமலர்களில் எடுக்கப்படும் தேன் விற்பனைக்கு வருகிறது. காட்டுத் தொழிலாளர்கள் அவற்றை நியாய விலைக்கு தருகிறார்கள். எனினும் வனங்களை இராணுவம் ஆக்கிரமித்துள்ளதால் தாம் அச்சத்துடனேயே தேன் சேகரிக்கும் வேலையை செய்வதாக சொல்கிறார்கள்.**




# எங்கள் வாழ்வும் வளமும்



- தமிழ்க்கவி -

**“பங்குனி மாதம் பகல்வழி போறவரைப் பார்த்திருந்தாலும் பாவம்”**

கால்நடையாக நடப்பதே பயணம் என்றிருந்த காலத்தில் வந்த பழமொழி அது. என நீங்கள் நினைத்தாலும், இப்போது வாகனங்களில் பயணிப்பவருக்கும் இதே விதிதான். வெப்பம் அதீதமான அளவில் வாட்டுகிறது. முற்றத்து மணலில் அப்பளம் போட்டால் பொரியும். அப்படி இருக்கிறது. இந்த பங்குனி மாதத்திற்கு வேறு பல சிறப்புகளும் உண்டு.

அம்மன் கோவில்களில் குளிர்த்தி எனப்படும் திருவிழா நடக்கும். பங்குனி உத்தரம் தமிழர்களுக்கு சிறப்பான நாளாகும். இலங்கையின் மூன்று மதத்தவர்களுக்கும் இந்த மாதத்திலோ மாதத்தை அண்டியோ விரதகாலம் இருக்கும். காரணம் பங்குனி சித்திரை மாதங்களில் அதீத உணவு உடல் நலத்திற்கு கேடு விளைவிக்கும். கூடுதலாக திரவ வகைகளே உணவாகும். புழைய சோற்றிர் நீரூற்றி வைத்து கரைப்பது,



கஞ்சி வைப்பது, நுங்கு, இளநீர் என்பவை சுற்றாடலில் கிடைக்கும் உணவுகளாகும்.

உடலில் வேர்க்குரு வேனல் கட்டிகள் என் என்னவெல்லாமோ வரும். அவற்றை பெரியவர்களோ, சிறியவர்களோ தவிர்க்க முடியாது. இதற்காகவே ஒரு நாளில் பலதடவை குளிப்பவர் தடிமல் சளி இவற்றால் பாதிக்கப்படுவார். இந்த வேர்க்குருவிற்கு இப்போது நல்ல முகப்பவுடர்கள் வந்திருக்கிறது. ஆனால் முற்காலத்தில் நாம் நுங்கு சாப்பிட்டே அதை கரைப்போம் நுங்கு சாற்றை உடலில் பூசி சற்றுநேரம் கழித்து குளிப்போம். நற்சீரகத்தை விழுதாக அரைத்து தேங்காய்ப் பாலில் கரைத்து பூசுவோம். போயே போய் விடும்.

கடுமையான வெய்யிலில் அலைவோம் என என்தந்தை அதை தடுப்பதற்காகவே எங்கள் வீட்டு மாமரத்தில் சின்னதும் பெரிதுமாக ஊஞ்சல் கட்டி விடுவார். நாங்கள் பொழுதுக்கும் அதில் விளையாடுவோம். என்றாலும் காற்றாடிகள் இல்லாத அந்தக்காலத்தில் யன்னல்களே வைக்காமல் முட்டச்சுவர் வைத்த வீடுகளுக்குள் இரவில் படுக்கையில் வியர்வையில் தொப்பலாக நனைந்துவிடுவோம். அதற்காக வெளி மாலில் அல்லது முற்றத்தில் பாய் விரிப்போம். பகல் முழுதும் வெய்யிலில் சூடேறிக்கிடக்கும் முற்றத்தை, நீர் தெளித்து பதமாக்குவோம்.

பங்குனி மாதம் புழுக்க காலம். அப்போதுதான் பழமரங்கள் பூத்து பிஞ்சு பிடிக்க ஆரம்பிக்கும். வனமெங்கும் பல மலர்களின் மணம் கலந்து கதம்ப மணம் வீசும். இது தேன்காலம் மலர்களில் சேர்த்த தேனை வண்டுகள் சேமித்த இடங்களை வேட்டைக்காரர்கள் கண்டு பிடிப்பார்கள். மாசி பங்குனி சித்திரை முடியும்வரை தேன் சேகரிப்பவர்கள். தமது வேலையில் விரைவைக் காட்டுவார்கள். சேகரிக்கும் தேனை சேமிக்க போத்தல்கள் இல்லாத காலத்தில் சுரைக்குடுவைகள் பயன்பட்டன. சுரைக்காய்களை பழுக்க விட்டு கொடி கருகிய பின் எடுத்து அதன் கழுத்தை



வாளால் அரிந்து விட்டு உள்ளிருக்கும் விதைகளைக் கொட்டிவிட்டு பானை வடிவத்தில் உள்ள பகுதியை சேகரித்து இப்படி திரவப் பொருட்களை வைத்திருப்பார்கள். அதன் மேற்பகுதிக்கு பொருத்தமாக ஒரு தேங்காய்ச் சிரட்டையை தும்பு நீக்கி அதைக் கொண்டு இறுக்கமாக மூடி வைப்பார்கள்.

இப்போது பிளாஸ்டிக் கொள்கலன்கள் பாவிப்பது பெருந்தவறு. அதன் இரசாயன நிலை அழிந்து நஞ்சாகும் அபாயம் உண்டு. கண்ணாடிப் போத்தல்களே சிறந்தது. தேனை வெய்யிலில் வைத்தாலும் அது கெட்டுப்போய்விடும். மற்றப்படி அது பல வருடங்களுக்கு பழசு படப்பட வீரியமான குணத்தை கொள்ளும். வைகாசியில் சோழகக் காற்று கிளம்பியதும், தேனீக்கள் அமைதியாகிவிடும். அதன்பின் தேன் எடுக்க முடிவதில்லை. மீண்டும் அடுத்த வருடம் மாசி மாதம் வரை காத்திருக்க

கருமையாக இல்லாமல் ஒருளவு மஞ்கள் நிறத்தையும் மென்மையையும் கொண்டிருக்கும். அதிலும் இளந்தேன் மிகவும் சுவையாகவும் மருந்துக்கும் விசேடமானதாகவும் இருக்கும். இது கொஞ்சம் பதிவான கிளைகளில் இருந்தால் எடுப்பதும் சுலபம். மலைத்தேன் பற்றிய அனுபவம் எமக்கு இல்லை.

தேனீக்களின் ஒரு நல்ல குணம் தமக்கு தீங்கு நேராத வரை மற்றவர்களை தாக்காது. ஒரு தேன்கூட்டை நாம் திருடும் போது ஒரு தேனீகூட சாகாமல் கவனமாக எடுத்தால் அவை அமைதியாக கலைந்து அலைந்து போய்விடும். அவற்றின் பலநாள் உழைப்பை திருடுகிறோமே என்ற கவலை கொஞ்சமும் இல்லாமல் நாங்களை தேனை சுவைக்கிறோம். தேனை எந்தப் பாத்திரத்தில் வைத்தாலும் அதன் மேற்பகுதியில் தேனின் சக்கையை அடைப்பானாக போட வேண்டும். அது இல்லாது போனால் தேன் புளித்துப்



வேண்டும் எனினும் சிலருக்கு கொப்பான் தேன் வாய்ப்பதுண்டு. பொந்துத்தேன் தடிப்பானதாகவும் அந்தந்த மரத்துக்கேற்ப சுவையையும் கொடுக்கும் கொப்பான் சிறியதாக இருந்தாலும் அதன்நிறமும்

போகும். சித்த வைத்தியத்திலும், ஆயள்வேத வைத்தியத்திலும் பல மருந்து வகைகளுக்கு உவமானமாக தேனை வைலப்பார்கள். சில சூரணங்கள் சில மாத்திரைகள் தேனில் குழைத்து சாப்பிட வேண்டும். சில

சூரணங்கள் மாத்திரைகளை பசு நெய்யில் கலந்து சாப்பிடத் தருவார்கள். இரண்டையும் ஒரே நேரத்தில் தருவதில்லை. அதனால்தான்,

“ஆநெய்க்கு ஒரு காலம் வந்தால் பூநெய்க்கு ஒரு காலம் வரும்” என்ற பழமொழி உண்டாயிற்று. ஆ...நெய் பசுநெய் பூ...நெய் தேன். இப்போது அந்த பழமொழியும் போய்விட்டது. காரணம். சூரணமெல்லாம் செய்து சாப்பிட்டு பத்தியம் இருக்க மனிதர்களுக்கு ஏது நேரம். கடையில் போய் தமக்கு தெரிந்த மாத்திரைகளை தாமே வாங்கிப் போட்டுக்கொண்டு போகிறார்கள்.

தற்காலத்தில் தேன்கூட போத்தல்களில் அடைத்து விற்பனையாகிறது. அவற்றுக் கான விற்பனை மாதிரிகள் சின்னங்கள் விளம்பரங்கள் என தொலைக்காட்சிகள் அதிருகின்றன. தேனீ வளர்ப்பில் பெறப்படும் தேன் மிக அதிகமாக விற்பனையாகிறது என்றாலும் அடைப்பான் இல்லாமல் கெட்டுப்போகாத தேன் அதசியந்தான் அதை பாதுகாத்து பதப்படுத்தி?! போத்தலில் அடைப்பதாக விளம்பரம் வருகிறது. தேனிக்கள் அந்த தேனை பூவில்தான் எடுக்கின்றன. மேலதிகமாக அவற்றுக்கு உணவு வழங்கப்படுகிறது.

அது சர்க்கரைதான் என்பது தெரியும். ஆனாலும் வண்டுகள் தமது வாயில் எடுக்கும் தேனில் தமது வாயிலிருந்து சுரக்கும் திரவத்தையும் கலந்து ஒரு மாற்றத்தை ஏற்படுத்தியே சேமிக்கின்றன. பூவிலிருந்து பெறப்படும் தேன் ஒரு மாற்றம்பெற்றே கூட்டில் வைக்கப்படுகின்றது. எனவே சீனியையும் அது தேனாக மாற்றி வீடுகிறது. ஆக இது ஒரு வியாபாரம்.

அப்பழுக்கற்ற காட்டுத்தேன் அருமை யானது. அந்த தேனின் நிறமும் அலாதி யானது. தேனை அது உண்மையான தேன்தானா என கண்டுபிடிக்க நாய்க்கு கொடுத்துப் பார்ப்போம். நாய்க்கு தேன் நஞ்சு. அது சாப்பிடாது. தேன் நீரில் போட்டால் கரையாமல் அப்படியே போய் அடியில் தங்கும். தேனை ஒரு புதினத்தாளில் இரண்டு துளிகளை விட்டு இரண்டு நிமிடம் கழித்து துடைத்துப் பாருங்கள் அது பேப்பரில் ஊறியிருக்காது. அது சுத்தமான தேன்.

எத்தனை வழிகள் இருந்தாலும் இன்றும் எமது வீட்டிற்கு சுத்தமான காட்டுமலர்களில் எடுக்கப்படும் தேன் விற்பனைக்கு வருகிறது. காட்டுத் தொழிலாளர்கள் அவற்றை நியாய விலைக்கு தருகிறார்கள். எனினும் வனங்களை இராணுவம் ஆக்கிரமித்துள் ளதால் தாம் அச்சத்துடனேயே தேன் சேகரிக்கும் வேலையை செய்வதாக சொல்கிறார்கள். தமிழர்களுடைய பொருண்மிய வளங்களை இன்னும் எத்தனை வகைகளில் அடமானம் வைத் துள்ளோம் என்பதை நாம் அறியாமலோ அறிந்தும் கண்டுகொள்ளாமலோ இருக்கிறோம்.

# நீரின்றி அமையாது உலகு



ஸ்ரீ நந்தகோபால் தாட்ஷாயினி
புவியியற்துறை,
யாழ்ப்பாணப்பல் கலைக்கழகம்



**நயினாதீவில் கடல் நீரை குடிநீராக மாற்றும் திட்டம் கொண்டுவரப்பட்டது இதன் மூலம் நயினாதீவு, அனலைதீவு, எழுவைதீவு போன்ற பகுதிகளுக்கு நீர்வழங்க திட்டமிடப்பட்டது. இவ்வாறு பலதிட்டங்கள் வடமாகாணத்தில் முன்னெடுக்கப்பட்டுள்ளது. இலங்கையி லும் பல திட்டங்கள் முன்னெடுக்கப்பட்டாலும் நீர் சார் பிரச்சினைகளும் குறிப்பிட்ட பகுதிகளில் தொடர்ந்து நிலவுகிறது..**

நீரின் முக்கியதுவத்தை உணர்த்தும் குறள் முலம் திருவள்ளுவர் நீரின் பெருமையை அன்றே கூறியிருக்கிறார்.

"நீரின்றி அமையாது உலகெனின் யார்யார்க்கும்
வானின்று அமையாது ஒழுக்கு"

என நீரின் முக்கியதுவத்தை அன்றே கூறி இருக்கிறார். அக்குறளில் சொல்லவருவது என்னவென்றால், நீர் இல்லாமல் இந்த உலகத்தில் எந்த உயிரினமும் நிலை பெற்று வாழ முடியாது. அந்த நீரை உலகத்திற்கு வழங்குகின்ற மழை இல்லையென்றால் இவ்வுலகில் எந்த ஜீவராசிகளும் வாழ்ந்திட முடியாது என்ற கருப்பொருளை தான் இக்குறளின் அடிப்படையிலே வெளிப்படுத்துகின்றார்.

நீரானது அமைதியை உருவாக்கக் கூடிய அல்லது மோதலை தூண்டக் கூடிய தொன்றாகும். அதவாது குறிப்பிட்ட நாட்டிற்குரிய நீரினை இன்னோர் பகுதிக்கு வழங்கும் போது அல்லது பகிர்தலை மேற்கொள்ளும் போது அந்த நிலைமை மோதலை ஏற்படுத்தக்கூடியது. இத்தகைய நீர் தினமானது 1992 ஆம் ஆண்டு ரியோ டி ஜெனிரோவில் நடைபெற்ற சுற்றுச்சூழல் மேம்பாடு குறித்த ஐ.நா பொதுச்சபையின் மாநாட்டின் முடிவில் உலகம் முழுவதும் நீர் தினம் கடைப்பிடிப்பது பற்றிய யோசனை ஏற்றுக் கொள்ளப்பட்டது.

அதன் அடிப்படையில் ஐக்கிய நாடுகளின் பொதுச்சபை ஒவ்வொரு ஆண்டும் மார்ச் 22 அன்று நீர் தினம் என்ற தீர்மானத்தை ஏற்றுக்கொண்டு 1993 முதல் உலக நீர் தினம் அனுஷ்டிக்கப்பட்டு வருகின்றது.

2024 ஆம் ஆண்டுக்கான உலக நீர் தினத்திற்கான கருப்பொருளாக "அமைதிக்கான நீர்" என்பது முன்வைக்கப்பட்டுள்ளது. நீரானது ஒவ்வொரு மனிதனும் அடிப்படைத் தேவைகளில் ஒரு விடயமாகும். அந்த வகையில் புவியில் நீரானது பரந்துள்ள வீதத்தினை கீழ்வரும் அட்டவணை 01 மூலம் விளங்கிக் கொள்ள முடியும்.

ஏறத்தாள 97 வீதமான நீரானது சமுத்திர நீராகவும் 3 வீதமான நீர் நன்னீராகவும் புவியின் மேற்பரப்பில் பரந்து காணப்படுகின்றது. உலகில் 2021 இல் 7.8 பில்லியன் ஆகவும் 2023 இல் 8 பில்லியன் ஆகவும் சனத்தொகையானது அதிகரித்த வண்ணம் இருந்தாலும் பயன்படுத்தக்கூடிய நீர்வளமாக 3 வீதமான நன்னீர் வளமே உள்ளது. இருப்பினும் சனத்தொகை அதிகளவு அதிகரித்தாலும் அவர்களின் அடிப்படைத்தேவையான நீர்த்தேவை அவசியம் பூர்த்தி செய்ய வேண்டியதாகவுள்ளது.

அனைத்து உயிரினங்கள், தாவரங்கள், விலங்குகள் மற்றும் மனிதர்கள் போன்றனவற்றிற்கு நீரானது அவசியமானது. நம் உடலில் கிட்டத்தட்ட 70மூ நீரினால் ஆனது. நாம் குடிக்கும் திரவங்களிலிருந்தும், உண்ணும் உணவிலிருந்தும் நம் உடலுக்கு நீரானது கிடைக்கிறது. நீரானது இல்லாமல் ஒரு வாரத்திற்கு மேல் யாரும் வாழ முடியாது. நீரானது கிடைக்காவிட்டால் அனைத்து செடிகளும் இறந்துவிடும். இது தாவரங்களை உணவுக்காக நம்பியிருக்கும் அனைத்து விலங்குகளின் மரணத்திற்கு வழிவகுக்கும். அதனால் வாழ்வின் இருப்பு முடிவுக்கு வரும். நீரானது மனிதன் வாழ்வில் அடிப்படைத்தேவைகளில் ஒரு விடயமாகும்.

### நீர் பற்றாக்குறை

நீரின் பற்றாக்குறை எனும் போது பௌதிக ரீதியான பற்றாக்குறை, பொருளாதார ரீதியான பற்றாக்குறை என இரண்டு வகையாக நோக்க முடியும். நீரின் பௌதிக ரீதியான பற்றாக்குறை என்பது நீர் வளமானது அல்லது நீரின் செல்வாக்கானது குறிப்பிட்ட பகுதியில் குறைவாக காணப்படுகின்ற நிலைமை ஆகும்.

உதாரணம் இந்தியாவில் பெங்களூர் பகுதியில் நதியின் செல்வாக்கானது குறிப்பிட்ட நாட்டில் இல்லாமை.


நீரின் பொருளாதார ரீதியான பற்றாக்குறை என்பது இயற்கையாகவே நீர் வளத்தின் செல்வாக்கு விருத்திடைந்து காணப்படுகின்ற போதும் அவ்வளத்தை விருத்தி செய்வதற்கு, அடையாளம் காண்பதற்கு, தொழில் நுட்பத்தை அணுகுவதற்கு பொருளாதார ரீதியில் நெருக்கடி காணப்படுகின்ற நிலைமை ஆகும்.

### நீர் பிரச்சினைகள்

உலகில் 99 வீதமான நன்னீரானது புவியின் கீழ் காணப்படுகின்றது. உலகில் 2.2 பில்லியன் மக்கள் இன்னும் பாதுகாப்பாக நிர்வகிக்கப்பட்ட குடிநீர் இல்லாமல் வாழ்கின்றனர், இதில் 115 மில்லியன் மக்கள் மேற்பரப்பு நீரைக் குடிக்கிறார்கள்.

உலக மக்கள்தொகையில் ஏறக்குறைய பாதி பேர் குறைந்த பட்சம் ஆண்டின் ஒரு பகுதிக்கு கடுமையான தண்ணீர் பற்றாக்குறையை அனுபவித்து வருகின்றனர். நீர் தொடர்பான பேரழிவுகள் கடந்த 50 ஆண்டுகளில் பேரழிவுகளின் பட்டியலில் ஆதிக்கம் செலுத்துகின்றன மற்றும் இயற்கை பேரழிவுகள் தொடர்பான அனைத்து இறப்புகளில் 70 சதவீதத்திற்கும் காரணமாகின்றன. உலகின் நன்னீர் பாய்ச்சலில் 60 சதவீதத்திற்கு எல்லைக்கு

அப்பாற்பட்ட நீர் பங்களிக்கிறது, மேலும் 153 நாடுகள் 310 எல்லை தாண்டிய நதி மற்றும் ஏரிப் படுக்கைகளில் குறைந்தபட்சம் 1 பகுதிக்குள் நிலப்பரப்பைக் கொண்டுள்ளன மற்றும் 468 எல்லை தாண்டிய நீர்நிலை அமைப்புகளைக் கொண்டுள்ளன. இவ்வாறான நீர் நெருக்கடிகள் உலகில் காணப்படுகின்றது.




### இலங்கையில் நீர்வளம்

இலங்கையில் மூன்று பிரந்தியங்களுக்கான மழைவீழ்ச்சி நிலைமை

ஈரவலயம்- 2500அஅ மேலான மழைவீழ்ச்சி (23 வீதமான நிலப்பகுதி)

இடைவலயம்-1500அஅ- 2500அஅ இடைப்பட்ட மழைவீழ்ச்சி (12 வீதமான நிலப்பகுதி)

வறள்வலயம் -1500அஅ குறைவாக மழைவீழ்ச்சி(65 வீதமான நிலப்பகுதி)

இவ்வாறான நிலைமை காணப்பட்டாலும் விரைவான கழிவு நீரோட்டம், உப்புகவிடுதல்தன்மைகுறைவு,விரைவான ஆவியாக்கம், காலநிலை மாற்றம் மற்றும் மானிட நடவடிக்கைகளால் நீர் சார் பிரச்சினை ஏற்படுகிறது.

இலங்கையில் 2025இல் 5.3 மில்லியன் மக்கள் நீர் பற்றாக்குறையினால் பாதிக்கப்படுவர். இலங்கையானது 103 நதிசார் பகுதியை கொண்டு இருந்தாலும் சில மாவட்டங்களின் அதன் செல்வாக்கு குறைவாக காணப்படுகின்றது. உதாரணம் யாழ் குடாநாட்டில் பருவகால ஆறான வழுக்கையாறு மட்டும் காணப்படுகின்றது. அந்த வகையில் 2019.04.07 இல் 321127 பேர் பாதிக்கப்பட்டுள்ளதாக இடர் முகாமைத்துவ நிலையம் தெரிவிக்கின்றது.

அதேபோன்று 10.06.2017 அன்று குறிப்பிடப்பட்டுள்ளதாவது இலங்கையில் 11 மாவட்டங்கள் (வடக்கு, கிழக்கு உட்பட) வறட்சி காரணமாக 849752 பேர் பாதிக்கப்பட்டுள்ளதாக அரசு பேரிடர் முகாமைத்துவ மையமானது தெரிவித்துள்ளது. இவ்வாறு ஒவ்வொரு வருடமும் நீர்சார்ந்த பிரச்சினையான வரட்சி மற்றும் வெள்ளப் பெருக்கு தாக்கத்தால் மக்கள் பாதிக்கப்பட்டு வருகின்றனர்.. இலங்கையில் நீர் சார் மூலங்களை பாதுகாக்கும் நிறுவனங்களாக பின்வருவனவற்றை நோக்கமுடியும்.

- நீர்ப்பாசனதிணைக்களம்
- கரையோர பாதுகாப்புத்திணைக்களம்
- இலங்கை மகாவலி அதிகாரசபை
- இலங்கை மின்சார சபை
- தேசிய நீர்வழங்கல், வடிகாலமைப்புச் சபை
- மாகாணசபை நீர்ப்பாசனத் திணைக்களம்/கமநல அபிவிருத்தி திணைக்களம்
- பிரதேசசெயலாளர்
- வனபரிபாலனத் திணைக்களம்
- வனஜீவராசிகள் பாதுகாப்புத் திணைக்களம்
- மத்திய சுற்றாடல் அதிகாரசபை
- நீர்வளச்சபை
- இலங்கை காணி மீட்புக்கும் அபிவிருத்திக்குமான கூட்டுத்தாபனம் போன்றன நீர் சார் மூலவளங்களின் வகைப்பாடு மற்றும் தொழிற்பாட்டிற்கு ஏற்ப செயற்பாடுகளை மேற்கொள்ளும் நிறுவனங்களாக காணப்படுகிறது.

### நீரினை பாதுகாக்கும் வழிமுறைகள்

நீர் வளம் ஆனது பேணிப்பாதுக்கப்படவேண்டிய ஒன்றாகும். அந்தவகையில் சில பாதுகாக்கும் நடவடிக்கைகளாக


- நீர்நிலைகளை பாதுகாப்பது எப்போதும் மிக முக்கியமானதொன்றாகும். எனவே எதிர்காலத்தை கருத்திற் கொண்டு இப்பொழுதிலிருந்தே நீரை பாதுகாப்பது அத்தியாவசியமாகின்றது.
- விவசாய செயற்பாடுகளின் போது நிலத்திற்கு போடும் உரங்களை இயற்கை முறையில் பயன்படுத்த வேண்டும். இதனால், மண்ணும் பாதுகாக்கப்பட்டு தரைக்கீழ் நீரும் பாதுகாக்கப்படும்.
- தாவரங்களுக்கு பயன்படுத்தும் பூச்சிக் கொல்லிகள் என்பவற்றையும் தீங்கற்ற முறையில் இயற்கையாக தயாரித்து பயன்படுத்துவோம். அத்தோடு,இரசாயனம் அற்ற பொருட்களை கொண்டு விவசாயம் செய்ய முடிந்தவரை முயற்சிக்க வேண்டும். இதனால் தரைக்கீழ் நீரும் ஏனைய நீர் நிலைகளும் காப்பாற்றப்படும்.
- நகரப்பகுதியிலுள்ள வீட்டுக் கழிவுகள், கடைகள், உணவகம் மற்றும் விடுதிகளின் கழிவுகளை சீரான முறையில் அகற்றல், பொலித்தீன், பிளாஸ்டிக் கழிவுகளை தகுந்த முறையில் அப்புறப்படுத்துதல் என்பன நீர் மாசடைவை தடுத்துக்கொள்ளமுடியும்.
- தகுந்த முறையான நீர்த்தேக்க முகாமைத்துவ திட்டத்தை அறிமுகப்படுத்தி செயற்படுத்த வேண்டும் அதேவேளை தொடர்ந்து கண்காணித்து திட்டத்தின் பயன் நிறைவேற்றப்படுதல் வேண்டும்.
- பயிர்ச் செய்கையின் போது பயிரிடப்படுகின்ற விதைகளுக்கு ஏற்பஇ பயிர்ச்செய்கைக்கு ஏற்ப அளவான நீரை பயன்படுத்துவதனால் நீர் வீண்விரயத்தை தடுக்கலாம். நீரை மாசுப்படுத்தாதிருத்தல் நீரை சேமித்தல், தொடர்பான இறுக்கமான சட்டங்களையும் விழிப்புணர்வையும் அரசினால் செயற்படுத்தப்பட வேண்டும்.
- மழைநீர் சேமிப்பு திட்டங்கள் கிராமங்களுக்கு அறிமுகப்படுத்தப்பட்டு செயல்படுத்த வேண்டும்.
- காடுகளை அழிக்காது மரங்களை வளர்த்து நீரினை பாதுகாக்கலாம். காட்டு வளங்களை பாதுகாப்பதால் மழை வீழ்ச்சி குறையாமல் இருக்கும் நீரும் சேமிக்கப்படும்.

நீரானது தோலை ஆரோக்கியமாக்கும், செரிமானத்திற்கு உதவும், நோய் எதிர்ப்பு சக்தியைப் பலப்படுத்தும், உடலின் வெப்பநிலையை சமனிலைப்படுத்தும் போன்ற நன்மைகளை வழங்குகிறது.

அத்தோடு இலங்கையில் இரணைமடுக்குள நீரினை யாழ். குடா நாட்டிற்கு வழங்கும்திட்டமானது 2015 ஆம்கொண்டு வரப்பட்டு கிளிநொச்சி மாவட்டத்தில் குடிநீர் தட்டுப்பாடான சில இடங்களுக்கு நீர் வழங்கப்பட்டது. எனினும் விவசாயத்திற்கு அந்த நீரானது போதாது என கிளிநொச்சி மாவட்ட விவசாயிகளால் கருத்தும் முன்வைக்கப்பட்டுள்ளது.

அத்தோடு யாழ் நயினாதீவில் கடல் நீரை குடிநீராக மாற்றும் திட்டம் கொண்டுவரப்பட்டது இதன் மூலம் நயினாதீவு, அனலைதீவு, எழுவைதீவு போன்ற பகுதிகளுக்கு நீர்வழங்க திட்டமிடப்பட்டது. இவ்வாறு பலதிட்டங்கள் வட மாகாணத்தில் முன்னெடுக்கப்பட்டுள்ளது.

அதேபோன்று இலங்கையிலும் பல திட்டங்கள் முன்னெடுக்கப்பட்டாலும் நீர் சார் பிரச்சினைகளும் குறிப்பிட்ட பகுதிகளில் தொடர்ந்து நிலவுவது கவலைக்குரிய விடயமாகும்.



# குடற்புழுத் தாக்கத்துக்கு பலியாகும் கால்நடைகள்





Dr.எஸ்.கிருபானந்தகுமாரன்
[BVSc,MVSc]
கால்நடை வைத்தியர், செட்டிகுளம்

**குடற்புழுவால் பாதிக்கப்படும் கால்நடைகள் மீள்வதற்கு நீண்ட காலம் எடுக்கிறது. அவை சினைப்படுவதும் கடுமையாக தாமதமடைகிறது. கன்றுகளின் வளர்ச்சி குறைகிறது. அவை சினைக்கு வருவதும் தாமதமடைகிறது. மருத்துவ, ஊட்டச் சத்துக்களின் செலவும் அதிகம்...**

இன்றைய நாட்களில் வவுனியாவின் பெரும்பாலான கால்நடைகளுக்கு Immature Paramphistomiosis எனும் தட்டைப்புழுவின் தாக்கம் அவதானிக்கப்பட்டுள்ளது. பலரின் கால்நடைகள் குறிப்பாக இளம் கால்நடைகள் இறந்துள்ளன. கடந்த சில நாட்களாக இது தொடர்பாக பல விழிப்புணர்வு நிகழ்வுகளை நடத்தி வரும் போது சில விடயங்களை அவதானிக்க முடிந்தது.

1. கடந்த வருட மாரி மழையின் பின் அதிகளவு கால்நடைகள் குறிப்பாக இளம் கன்றுகள் (ஒரு வயதுக்கு உட்பட்டவை) இறந்துள்ளன.

2. மேய்ச்சல் தரை/ போதிய புற்கள் இல்லாமையால்தான் அந்த இறப்புகள் நிகழ்ந்ததாக பண்ணையாளர்கள் கருதுகின்றனர். ஓரளவுக்கு இது உண்மை எனினும் நேரடிக் காரணியான குடற் புழு நீக்கம் அவற்றின் தாக்கம் பற்றி அவர்களுக்கு போதிய விளக்கம் கிடையாது. மாடுகள் கழியும் போது, மெலியும் போதுதான் குடற்புழு நீக்கம் பற்றி சிந்திக்கிறார்கள். பெரும்பாலானவர்கள் எவ்வளவு சொல்லியும் அறிகுறிகள் தெரியாத போது குடற்புழு நீக்கம் செய்ய மாட்டார்கள்.

3. தொடர்ச்சியான மழை காரணமாக பண்ணையாளர்கள் தங்கள் கால்நடைகளுக்கு குடற்புழு நீக்க மருந்துகள் கொடுக்கவில்லை. (மழை காலத்தில் கொடுக்கக் கூடாதாம்). அதிலும் பலர் மழை விட்டு 2 மாதங்களாகியும் குடற்புழு நீக்க கொடுக்க வில்லை.

4. பெரும்பாலான பண்ணையாளர்கள் நெற்பயிர்ச் செயகையில் ஈடுபடுவதால் இந்தக் காலப் பகுதியில் வயல் வேலை, நெல்வெட்டும் பணிகளில் இருந்ததால் தமது கால்நடைகளை சரியாக கவனிக்க வில்லை. அந்தக் காலத்தில் நாளின் பெரும்பகுதியை பட்டிகளில் அடைத்த படியே கால்நடைகள் கழித்திருக்கின்றன. எல்லாம் முடிந்த பின் தற்போதுதான் தமது கால்நடைகளை கவனிக்க தொடங்கியுள்ளனர். கால்நடை வைத்தியர் அலுவலகம் வருகின்றனர். இந்த காலத்தில் அவர்களின் ஒட்டுமொத்த பண்ணைகளும் நோய்த் தொற்றுக்கு உள்ளாகி பல கால்நடைகள் இறந்து போயுள்ளன.

5. ஜனவரி மாத தொடக்கத்தில் இளம் கன்றுகள் இறந்தன. பெப்ரவரியில் முதிர் கன்றுகளும் மார்ச் தொடக்கத்தில் பலவீனமான பெரிய மாடுகளும் வீழ்ந்து



இறக்கின்றன. (ஆடுகள் கடந்த டிசம்பர் முதலே பாதிக்கப் பட்டுள்ளன). சிலரின் பண்ணைகளில் இந்த காலப் பகுதியில் பிறந்த ஒரு கன்று கூட உயிருடன் இல்லை. எல்லாம் முதிர்ந்த மாடுகள் தான் உள்ளன. ( 30 கன்றுகள் இறந்த பண்ணைகளும் உள்ளன)

6. பண்ணைகளில் காணப்படும் சிறு விலங்குகள் மெலிந்து, உரோமம் சிலிர்த்து, வயிறு, கழுத்து வீங்கிய நிலையிலுள்ளன. (100ழூ) . சில கழிகின்றன. படுத்தால் எழும்பச் சிரமப்படுகின்றன. எழுப்பி விட்டால் தள்ளாடித் தள்ளாடி மேய்கின்றன. இறுதியில் கடுமையாக பலவீனமடைந்து இறக்கின்றன.

7. பெரிய மாடுகள் மெலிவடைந்துள்ளன. பாலுற்பத்தியும் குறைந்துள்ளது. கன்றுக்கே காணாத நிலை இருப்பதாக பலர் சொல்லுகின்றனர்.

8. பலரின் மாட்டுக் கொட்டைகைகள் எருவால் நிரம்பிக் கிடக்கின்றன. (5 நாட்களுக்கு ஒருமுறை வரும் யாழ்ப்பாணத்து எரு லொறிகளுக்கு விற்க. ஒரு வாரத்துக்க 4000 வரை விலை போகிறதாம். அதைப் பெறத்தான்.) .

அந்த எருக்களுக்குள் தான் சிறிய விலங்குகளும் உள்ளன. சாணி அதிகளவு கழிச்சல் நிலையில் தான் உள்ளது. வருடம்



முழுதும் எரு வழங்கினாலும் குடற்புழு தாக்கத்தால் இறக்கும் ஓரிரு மாடுகளின் பெறுமதியை அடைய முடியாது என்பதை அவர்களால் உணர முடியவில்லை. இதே போன்றுதான் நெற் பயிர்ச் செய்கையில் கிடைக்கும் வருமானத்தை விட உணவின்றி, குடற்புழுவால் இறக்கும் கால்நடைகளின் இறப்பு மூலமான நட்டம் பன்மடங்கு அதிகம். (நெற்பயிர் மற்றும் கால்நடை வளர்ப்பை ஒன்றாகச் செய்யும் பண்ணையாளர்களில் அவதானித்தது)

9. குடற்புழு மருந்து கொடுப்பதிலும் பல தவறுகள் நிகழ்கின்றன. கால்நடைகளின் எடைக்கே மருந்துகள் உள்ளன. பலர் கால்நடைகளின் சரியான எடையை



அனுமானிப்பதில்லை. மிகவும் குறைத்தே கணிக்கிறார்கள். இதனால் முழுமையாக குடற்புழுவைக் கொல்ல முடியாத நிலை தோன்றுகிறது. பொருத்தமற்ற குறிப்பாக குறித்த குடற்புழுவைக் கொல்லத்தக்க மருந்தை வழங்குவதில்லை. பெரும்பாலான பண்ணையாளர்கள் கால்நடை வைத்தியரிடம் செல்லாது பண்ணைக் கடைகளில் எழுந்தமானமாகவே நேரடியாக குடற்புழு மருந்துகளை வாங்குகின்றனர்.

பெரும்பாலும் அங்கு காலத்துக்கு பொருத தமற்ற மருந்தே குறைந்த அளவில் (ருனெநச னழளந) வழங்கப் படுகிறது. இதனால் ஒட்டுண்ணி எதிர்ப்பும் தோன்றுகிறது. (பண்ணைக் கடையில் பண்ணையாளர் குறைத்துச் சொல்லும் உடல் நிறைக்கே மருந்து வழங்கப்படுகிறது)

10. மருந்து நிறுவனங்கள் நேரடியாக சகல பண்ணைக் கடைகளுக்கும் அதிகளவில் குடற்புழு நீக்க மருந்துகளை வழங்குகின்றனர். எனினும் அவற்றின் பக்க விளைவுகள் மற்றும் மருந்துகள் பால் இறைச்சி மூலம் மனிதனுக்கு பரவும் ஆபத்து தொடர்பாக எதையும் அறிவுறுத்துவதில்லை. பல குடற்புழு நீக்க மருந்துகள் மனிதனுக்கும் பாவிக்கப்படுபவை.

11. குடற்புழுவால் பாதிக்கப்படும் கால்நடைகள் மீள்வதற்கு நீண்ட காலம் எடுக்கிறது. அவை சினைப்படுவதும் கடுமையாக தாமதமடைகிறது. கன்றுகளின் வளர்ச்சி குறைகிறது. அவை சினைக்கு வருவதும் தாமதமடைகிறது. மருத்துவ, ஊட்டச் சத்துக்களின் செலவும் அதிகம்.

12. மேய்சலை நம்பிய கால்நடைகளே அதிகம் பாதிக்கப்படுகின்றன. குளங்களின் அலைகரைகள் பயிர் செய்யப்படாத வயல்களே அவற்றின் மேய்ச்சல் வெளிகள். பெரும்பாலான குடற்புழுக்களை கடத்தும் நத்தைகள் போன்ற இடைநிலைக்காவிகள் அதிகளவில் குளக் கரைகளை அண்மித்த பகுதியில் இருப்பதால் அங்கு மேயும் கால்நடைகள் பாதிக்கப் படுகின்றன. மேலும் தற்போது மேற்படி குளங்கள் திருத்தப்பட்டு பல வயல்வெளிகள் சிறு போகத்துக்கும் பயன்படுவதால் அவற்றை மேய்ச்சலுக்கு நம்பிய கால்நடைகள் பாதிக்கப் படுகின்றன.



# தோட்டத் தொழிலாளர்களுக்கான 1700 ரூபா சம்பள உயர்வு கண்துடைப்பா?

**ஜீவா சதாசிவம்**

**தற்போது அதிகரித்துச் செல்கின்ற பொருட்களின் விலைகளுக்குஅமைவாக வெறுமனே 1700 ரூபா அதிகரிப்பதால்தோட்டத் தொழிலாளர்களின் தொடர்ச்சியாக எதிர நோக்கும்பொருளாதார நெருக்கடி அவர்களை அடிமைப்படுத்தும் நிலைமை தீரப்போவதில்லை**



“இந்த 1700 ரூபா சம்பள அதிகரிப்பு தற்போது நாங்கள் எதிர்கொள்ளும் நெருக்கடியில் இருந்து மீள்வதற்கு வழி வகுக்குமா அல்லது இதுவும் தேர்தல்கால வாக்குறுதியா? என தேயிலைத் தோட்டத்தில் பணிபுரியும் திருமதி. சித்திரா என்ற பெண் தொழிலாளியொருவர் பெருமூச்சுடன் கூறுகிறார். இப்போது தோட்ட கம்பனிகள் தமது தேயிலைத் தோட்டத்தில் உள்ள காணிகளை குறிப்பிட்ட ஏக்கர் கணக்கில்தான் துண்டுகளாக தொழிலாளர்களுக்கு பிரித்து வழங்கப்பட்ட நிலையில் அதனூடாகவே மேலதிக கொழுந்தை பறித்ததுடன் அதன் பராமரிப்பு வேலைகளிலும் ஈடுபடுகின்றோம். அவுட் குரோவர் முறை என அதனை சொல்கிறார்கள். மாத சம்பளத்திற்கு தேயிலை மலைகளிலும் வேலை செய்கிறோம். நாளொன்றுக்கு 20 கிலோ பறித்தால் மாத்திரமே அன்றைய சம்பளம் கிடைக்கும். இல்லாவிடின் அரை நாள் சம்பளம் பெறக்கூடியதாக இருக்கும். இந்நிலையில் இந்த 1700 சம்பளவுயர்வு கிடைத்தால் கொஞ்சம் மகிழ்ச்சி ஐந்து பேர் கொண்ட எனது குடும்பத்தில் எல்லா செலவுகளுக்கும்குறைந்தது மாதமொன்றுக்கு 50 ஆயிரம் ரூபா அளவில் தேவைப்படுகிறது. தற்போது அதிகரித்துள்ள பொருட்களின் விலை எதற்கும் ஈடு கொடுக்க முடியாத நிலை ஏற்பட்டுள்ளது என்கிறார்.

“மலையக பெருந்தோட்ட தொழிலாளர்களுக்கு எதிர்வரும் 30 நாட்களுக்குள் சம்பள உயர்வு கிடைக்கும் என்றும் நாட் சம்பளம் ஆயிரத்து 700 ரூபாவை பெறமுடியும் என்றும் அமைச்சர் ஜீவன் தொண்டமான், தலவாக்கலை ஒலிரூட் தோட்டத்தில் இடம்பெற்ற நிகழ்வில், பகிரங்கமான அறிவிப்பு விடுத்திருந்தார். இன்றுடன் (24.03.2024) பத்து நாட்கள் எட்டியுள்ள நிலையில் இந்த அறிவித்தலானது பெருந்தோட்ட மக்களிடையே பெரும் எதிர்பார்ப்பை ஏற்படுத்தியுள்ளது.

இந்நிலையில், இ.தொ.கா வின் செயலாளர் செந்தில் தொண்டமான் 1700 ரூபா கிடைப்பது தொடர்பில் ஜனாதிபதியுடன் தற்போது பேச்சுவார்த்தை நடத்தவதாகவும் மக்களின் அதிகரித்துள்ள வாழ்க்கைச் செலவு கருதி அதனை பெற்றுக்கொடுக்க இ.தொ.கா முழு மூச்சுடன் செயற்படும் எனவும் பகிரங்கமாக அறிவித்துள்ளதைக் கருத்திற்கொண்டு சில தேயிலைத் தோட்டத் தொழிலாளர்களின் சம்பள உயர்வு விடயம் தொடர்பில் ஆராயலாம்.

நாடு தற்போது எதிர்நோக்கியுள்ள பொருளாதார நெருக்கடியில் இலங்கையை உலகிற்கு அறிமுகப்படுத்திய “சிலோன்டீ“ க்கு சொந்தக்காரர்களான மலையக பெருந்தோட்ட தேயிலைத் தோட்டத் தொழிலாளர்களுக்கு தற்போது ஏற்பட்டுள்ள பொருளாதார நெருக்கடியில், இவ்வாறான சம்பள உயர்வு வழங்குவது குறித்த அறிவிப்பானது பெரிதும் வரவேற்கத்தக்க விடயம்.

பல வருடங்களாக இழுபறி நிலையில் இருந்து வந்த மலையகப் பெருந்தோட்டத் தொழிலாளர்களின் ஆயிரம் ரூபா சம்பள கோரிக்கையானது பல விமர்சனங்கள், இழுத்தடிப்புகள் மற்றும் ஆயிரத்தையும் கடந்த பல பிரச்சினைகளுக்கு மத்தியில் 2021ஆம் ஆண்டு நிறைவேற்றப்பட்டு அச்சம்பளம் வழங்கப்படுகின்றது. தோட்டத் தொழிற்துறையில் நிரந்தரமாக பதிவு செய்யப்பட்ட தொழிலாளர்களுக்கே இந்த சம்பளத் தொகை வழங்கப்பட்டது. அந்த ஆயிரத்தை பெறுவதற்கும் ஆயிரம் கட்டுப்பாடுகள் பெருந்தோட்ட முகாமைத்துவத்தினால் அறிமுகப்படுத்தப்பட்டு அதற்கேற்றவாறே சம்பளப்பணம் வழங்கப்படுகின்றது. கூட்டு ஒப்பந்தத்தின் கீழ் மிகச்சிறிய தொகையேனும் அதிகரிக்கப்பட்டு இதர சலுகைகள் வழங்கப்பட்ட நிலையில் தொழிலாளர்கள் மாதாந்த சம்பள பணத்தை பெற்று வந்தார்கள். ஆயிரம் ரூபா நாள் சம்பளம் வாங்கிய பின்னர் தற்போது தோட்டத் தொழிற்துறையில் வேலை செய்யும் தொழிலாளர்களுக்கு நாளாந்தம் வேறு வடிவிலான பிரச்சினைகளும் எழுந்துள்ளது.

**கம்பனிகள் தோட்டங்களை பொறுப்பேற்றலும் கூட்டு ஒப்பந்த முறைமையும்**

25 பெருந்தோட்டக் கம்பனிகள் அரசாங்கத்திடம் இருந்து 1992 ஆம் ஆண்டு தோட்டங்களை குத்தகை அடிப்படையில் பொறுப்பேற்றுக்கொடு அதனை தற்போது தோட்டங்களை நிர்வகித்து வருகின்றன. அதன் பின்னர் தோட்டத்தொழிலாளர்களின் நாட்சம்பளத்தை “கூட்டு ஒப்பந்தம்“ என்ற முறைமை அடிப்படையில் வழங்குவதற்கு மலையகத்தில் பிரதான தொழிற்சங்கங்களாக செயற்பட்ட இலங்கை தொழிலாளர் காங்கிரஸ், இலங்கை தேசிய தோட்டத் தொழிலாளர் சங்கம், கூட்டுகமிட்டி ஆகியவற்றுடன் ஒப்பந்தம் ஒன்றை 1998ஆம் அண்டு காலப்பகுதியில் செய்து கொண்டன. இந்த ஒப்பந்தத்தில் சம்பளம் சார்ந்த விடயங்களை

மாத்திரம் கவனத்திற்கொள்ளாது, தோட்டத் தொழிலாளர்களின் சில நலன்சார் விடயங்களும் உள்ளடக்கப்பட்டிருந்தது.

1992 ஆம் ஆண்டு பெருந்தோட்டங்கள் தனியார்மயப்படுத்தலுக்கு உள்ளானதன் பின்னர் அந்தப் பெருந்தோட்டத்துறை தொழிலாளர்களின் சம்பளவிடயத்தில் அரசாங்கம் கொண்டிருந்த கட்டுப்பாடுகள் அதிகாரங்கள் எல்லாமே இழக்கப்பட்டன. சம்பளநிர்ணய சபைச் சட்டத்தின் பிரகாரம் அரசாங்கமும் ஓர் அங்கமாக பேச்சுவார்த்தைகளில் பங்கேற்கும் வாய்ப்பு இழக்கப்பட்டது.

கூட்டு ஒப்பந்த முறையில் சில சரத்துக்கள் பேரளவில் சம்பள அதிகரிப்பைத் தருவதாக தயாரித்துவிட்டு உள்ளே அந்த சம்பளம் கிடைக்க முடியாதவாறான சரத்துகள் சேர்க்கப்படுகின்றன. குறிப்பாக 75 சதவீத வரவுபதிவு செய்தால் மாத்திரமே அவர்கள் வேலை செய்யும் அத்தனை நாளுக்குமான 60 ரூபா சம்பள அதிகரிப்பு கிடைக்கும் என்பதாகும். இது அவ்வாறு அமையாத வாறு தொழிலாளர்கள் முகாமை செய்யப்படுகிறார்கள்.

இந்த ஒப்பந்தத்திற்கு அமைவாக இரண்டு வருடங்களுக்கு ஒரு முறை 5ரூபா முதல் 100 ரூபா என்ற எல்லைக குள்ளேயே சம்பள உயர்வும் இடம்பெற்று வந்துள்ளது. பல பிரச்சினைகள் ஆர்ப்பாட்டங்கள், கண்டன ஊர்வலங்கள் என பல சிரமங்களுக்கு மத்தியிலேயே தொழிலாளர்களுக்கு ஒவ்வொரு முறை கூட்டு ஒப்பந்த புதுப்பித்தலின்போதும் அதிகரிக்கப்பட்டது என்பதே வரலாற்று உண்மை. கடந்த கால வரலாற்றை எடுத்துபார்த்தால் 1998 முதல் 2018 வரை வேறுபட்ட வீதங்களில் அடிப்படை சம்பளம் அதிகரிக்கப்பட்டுவந்துள்ளது. அது 6 சதவீதமாகவும் 40 சதவீதமாகவும் கூட அமைந்து காணப்படுகின்றது.

### ஆயிரத்துக்கு பின்னரான கோரிக்கை தற்போது 1700 ஆக...

இவ்வாறு தொடர்ந்து செல்லும் நிலையில் காலம் காலமாக அரசியல் தேவைகளுக்காக குறிப்பாக தேர்தல் காலம் நெருங்கும் காலப்பகுதியில் கட்சியின் இரு தரப்பினரும் ஏலம் கூவுவது போல நாங்கள் அந்தால் ஆயிரம் தருவோம் , 1500 தருவோம் என தேர்தல் காலத்தில் சொல்லி வந்தன. இந்நிலையில், 2015ஆம் ஆண்டு தேர்தல் காலப்பகுதியில் 1000 பெற்றுக்கொடுப்போம் என கூறிய இரண்டு தரப்பும் இப்போது கூட்டு ஒப்பந்தத்தை கைவிட்டு, சம்பள நிர்ணய முறைமை எனும் அடிப்படையில் ஆயிரம் ரூபா நாள் சம்பளத்தினைப் பெற்றுக்கொடுத்துள்ளன. ஆயிரம் ரூபா என்பது எனது தந்தையின் கனவு அதனை நிறைவேற்றி விட்டேன் என ஆத்ம திருப்தி அடைந்தவராக இருந்த அமைச்சர் ஜீவன் தொண்டமான் தற்போது 30 நாட்களுக்குள் ஆயிரம் பெற்று தருவதாக அறிவித்திருக்கின்றார்.



ஆயிரம் சம்பள உயர்வு வழங்கிய காலத்தில் இருந்த வாழ்க்கைச் செலவு இரண்டு மடங்காக அதிகரித்திருந்தது. அதேபோல 1700 வழங்குவதான அறிவிப்பின் போது வாழ்க்கைச் செலவு நான்கு மடங்காக அதிகரித்துள்ளது.

### ஆயிரத்தால் இழந்தவை 1700 இல் கிடைக்குமா?

கூட்டு ஒப்பந்தம் எனும் முறைமையினால் மக்கள் பல சலுகைகளை அனுபவித்து வந்தனர். சுகாதார நலன்சார் விடயங்கள் உட்பட பல நலன்களை அனுபவித்தனர். பொதுவாக நாளொன்றுக்கு பறிக்கும் தேயிலை கொழுந்தின் அளவு 12 கிலோவாக (கொழுந்து இல்லாத வறட்சியான காலப்பகுதியில்) இருந்தாலும் அன்றைய நாளுக்குறிய முழுமையான சலுகையுடன் கூடிய பணத்தொகை கிடைத்து வந்தது. ஆனால் , ஆயிரம் அதிகரிப்பின் பின்னர் கண்டிப்பாக நாளொன்றுக்கு 20 கிலோ கொழுந்து பறிக்க வேண்டும் என்றும் அவ்வாறு தவறும் பட்சத்தில் குறிப்பிட்ட ஆயிரத்தை எட்ட முடியாது என்றும் தோட்டங்களை நர்வாகித்து வரும் பெருந்தோட்டக் கம்பனிகள் தரப்பில் நிர்ப்பந்திக்கப்பட்டு வருவதாக தோட்டத் தொழிலாளர்கள் கவலையடைகின்றனர்.

அது மாத்திரமன்றி பல தோட்டங்களில் இவ்வாறான நடவடிக்கையை கண்டித்து தோட்ட நிர்வாகத்திற்கெதிராக ஆர்ப்பாட்டத்திலும் ஈடுபட்டு வருகின்றனர். ஆக இந்த 1700 ரூபா அதிகரிப்பின் பின்னர் இன்னும் மேலும் என்ன இழக்க நேரிடும் என்ற அச்சமும் மக்களிடம் நிலை கொண்டுள்ளது.

தற்போது அதிகரித்துச் செல்கின்ற பொருட்களின் விலைகளுக்கு அமைவாக வெறுமனே 1700 ரூபா அதிகரிப்பதால் தோட்டத் தொழிலாளர்களின் தொடர்ச்சியாக எதிர்நோக்கும் பொருளாதார நெருக்கடி அவர்களை அடிமைப்படுத்தும் நிலைமை தீரப்போவதில்லை. மலையகத்திலும் தோட்டத் தொழிலாளர்களை சிறுதோட்ட உடமையாக்குவதே மலையக மக்களின் பொருளாதார வாழ்வாதார பிரச்சினைக்கு நிரந்தர தீர்வைத்தரும். அதற்கு தொழிற்சங்க நடவடிக்கைகள் மட்டும் போதாது. காத்திரமான அரசியல் முன்னெடுப்புகளே தேவை. அதுவே காலத்தின் அவசியம், எதிர்காலத் தேயிலைத்துறையின் செழுமைக்கும் காரணமாக அமையும்.

ஸ்ரீ1972 ஆம் ஆண்டு அரசாங்கம் பிரித்தானிய கம்பனிகளிடம் இருந்து தோட்டங்களைப் பொறுப்பெடுத்ததன் பின்னரே தென்னிலங்கை சிங்கள மக்களுக்கு அவை சிறுதோட்டங்களாகப் பகிர்ந்தளிக்கப்பட்டன. இன்றும் பெரும்பான்மையினருக்கு இவ்வாறு பகிரந்தளிக்கப்பட்ட காணிகளிலேயே சிறுபாண்மை மக்கள் நாட்கூலிகளாக இருக்கின்றமையும் கவலைத்தரும் விடயமே.இன்று தேயிலை ஏற்றுமதியில் சிறுதோட்ட உடமையாளர்கள் சுமார் 75 சதவீத வருமானத்தைப் பெற்று வெற்றி பெற்றிருக்கின்றன. ஆனால் மலையகத் தமிழ் தொழிலாளர்கள் தொடர்ந்தும் பெருந்தோட்ட கம்பனிகளின் கீழ் நாட்கூலிக்கு அமர்த்தப்பட்டுள்ளனர். அவர்கள் வேலை செய்யும் பெருந் தோட்டங்கள் 25வீதமான பங்களிப்புகளிப்பையே ஏற்றுமதிக்கு வழங்குகின்றமையும்வேதனைக்குறியதே!



# ரிஸ்க் எடுக்கப் பயந்து ஒதுங்கி நின்றால் என்னதான் நடக்கும்?

**தன்னம்பிக்கை என்பது நாம் எடுக்கும் காரியத்தில் வெற்றி நிச்சயம் என்று நம்பிக்கை கொள்வது மட்டுமல்ல. எடுக்கும் காரியத்தில் வரும் இடர்களை எதிர்கொண்டு சமாளித்து வெற்றி பெறும் தைரியத்தைக் கொண்டிருப்பது என்பதைப் புரிந்துகொண்டு செயல்படுங்கள்**

**பேராசிரியர் சார்லஸ் பெப்பின்**

பரபரப்புக்குப் பஞ்சம் இல்லாத இன்றைய கால கட்டத்தில் பலருக்கும் மனச்சோர்வு என்பது தவிர்க்க முடியாத விஷயமாக இருக்கிறது. இந்தச் சூழ்நிலையை எதிர்கொண்டு தன்னம்பிக்கையுடன் வாழ்வது எப்படி என்பதை விளக்கமாக எடுத்துச் சொல்கிறது 'செல்ஃப் கான்ஃபிடன்ஸ்' (Self Confidence) என்கிற புத்தகம். இதை எழுதியவர் பாரீஸில்




வசிக்கும் தத்துவப் பேராசிரியர் சார்லஸ் பெப்பின்.

"மனித வாழ்க்கையானது ஒரு நிச்சய மற்றத் தன்மை கொண்டது. இந்த நிச்சய மற்றத் தன்மையை நாம் ஏற்றுக்கொண்டே ஆக வேண்டும். ஏனென்றால், வாழ்வில் நாம் எடுக்கும் எல்லா முடிவுகளிலுமே ரிஸ்க் என்பது இருக்கவே செய்கிறது. எந்த அளவுக்கு அதிக ரிஸ்க்கை சரியாக எடுக்கிறோமோ, அந்த அளவுக்கு நாம் மகிழ்ச்சியுடனும் வாழ்வோம்.

ரிஸ்க் எடுக்க பயந்து ஒதுங்கி நின்றால் என்னவாகும்? ரிஸ்க் குறைய குறைய நாம் எடுக்கும் முடிவுகள் சிறப்பானதாக இருக்காது. கடைசியில் எல்லா விஷயங்களிலும் ரிஸ்க் எடுக்கப் பயந்து, சரியான முடிவை எடுக்க முடியாமல் குழம்பிப் போய்விடுவோம். இந்தக் குழப்பமான நிலையில் இருந்து மீண்டுவந்து சரியான முடிவை எடுக்க நமக்குத் தன்னம்பிக்கை தேவை.

இதற்கு ஓர் உதாரணம் சொல்கிறேன். நீங்கள் நல்லதொரு வேலையில் இருக்கிறீர்கள். நீங்கள் வேலை பார்ப்பது பழம்பெரும் நிறுவனத்தில். அங்கு லாபத்துக்குப் பஞ்சம் இல்லை. நல்ல சம்பளம் மற்றும் சலுகைகள் கிடைக்கின்றன. ஆனால், வேலை மாறலாம் என்கிற ஆசை உங்களுக்கு வருகிறது. ஒரு ஸ்டார்ட்அப்பில் வேலை கிடைக்கிறது. தற்போதைய சம்பளத்தைவிட இரண்டு மடங்கு சம்பளம். ஆனால், ஸ்டார்ட்அப் தோற்றால் வேலை காலியாகிவிடும். இதற்கு பயந்து புதிய வேலையை ஒப்புக்கொள்ளாமல் விடுவது குழப்பமான மனநிலை

'புராஜெக்ட் எல்லாம் நல்லாதான் இருக்கு. நிறைய விஷயங்கள் தெளிவாக இல்லை... எதிர்காலத்தில் தேவை எப்படி இருக்கும், இந்த ஐடியா ஜெயிக்குமா, இப்போது இருக்கும் அளவுக்கே தேவை வளருமா என்பது குறித்த டேட்டா, தகவல் இல்லை' என்று கூறி அந்த வேலையை ஏற்றுக்கொள்ளாமல்இருப்பதுதன்னம்பிக்கை அற்ற நிலை.

'ஸ்டார்ட்அப் ஃபெயில் ஆனால் என்ன வாகும்? வேலை போகும். அவ்வளவுதானே! என் திறமைக்கு ஆறு மாதங்களுக்குள் வேறு வேலை கிடைத்துவிடும்' என்று நினைத்து துணிச்சலுடன் ஒரு முடிவை மேற்கொள்வது தான் தன்னம்பிக்கை. இந்தத் தன்னம்பிக் கையைப் பெறுவது எப்படி, வளர்த்தெடுத்து, தக்கவைத்துக் கொள்வது எப்படி..?" என்று கேள்வி எழுப்பும் ஆசிரியர், அதற்கான பதிலை விளக்கமாக இந்தப் புத்தகத்தில் எடுத்துச் சொல்லியிருக்கிறார்.

"4 வயதுப் பெண் குழந்தை ஒன்றுக்கு சிறிய சைக்கிள் வாங்கிக் கொடுத்தார்கள். சைக்கிளை ஓட்ட பயந்தது அந்தக் குழந்தை. அதற்காக, பின் சக்கரத்தில் பொருத்தப்படும் இரண்டு கூடுதல் சக்கரங்களை வாங்கிப் பொருத்தினார்கள். அதன்பின் குழந்தையின் அப்பா குழந்தையை சைக்கிள் ஓட்ட தெருவுக்கு கூட்டிச் சென்றார். ஆரம்பத்தில் பயந்த குழந்தை கூடுதல் சக்கரங்கள் தரும் சப்போர்ட்டால் கொஞ்ச தூரம் சைக்கிளை ஓட்டியது. அப்பா, குழந்தையை உற்சாகப்படுத்தினார். 'பெடல் செய்வதை நிறுத்தாதே. தொடர்ந்து ஓட்டு. இன்னும் கொஞ்சம் வேகமாக ஓட்டு" என்றெல்லாம் ஊக்குவித்தார்.

கொஞ்சம் கொஞ்சமாக ஓட்ட ஆரம்பித்து நல்ல வேகத்தில் நீண்ட தூரம் ஓட்டியது குழந்தை. ஆரம்பத்தில் சைக்கிள் ஓட்ட பயந்த குழந்தையை எது வேகமாகவும் நீண்ட தூரமும் ஓட்ட வைத்தது..? குழந்தையின் நம்பிக்கையா அல்லது கூடுதல் சக்கரங்களா..? வேகமாக ஓட்டுவதில் கிடைக்கும் த்ரில்லா அல்லது அப்பா தந்த ஊக்குவிப்பா..? எல்லாம்தான். தன்னம்பிக்கை என்பது இது போன்ற பல்வேறு விஷயங்களை உள்ளடக்கி உருவாகும் விஷயமாகும்.

பண்டைய காலத்தில் தன்னம்பிக்கை என்பது பெரிய அளவில் அவசியமில்லாமல் இருந்தது. ஏனென்றால், ஒவ்வொருவருக்கும் ஒரு பொறுப்பு என்பது கிட்டத்தட்ட வரையறுக்கப்பட்டதாக இருந்தது. இன்றைக்கு நிலைமை அப்படியில்லை.

நம் வாழ்க்கைக்கு நாமே பொறுப்பு. நம் மதிப்பை நாம் உயர்த்திக்கொள்ள படாதபாடு படுகிறோம். நாம் அடைந்த நிலையை நிலைநிறுத்திக்கொள்ள தொடர்ந்து போராடுகிறோம். இதனாலேயே தன்னம்பிக்கையின் தேவை இன்று மிக மிக அதிகமாகிவிட்டது.

உதாரணமாக, வயலில் உழைத்து அதில் உருவாகும் விளைச்சலை வைத்து குடும்பத்தினர் அனைவருக்கும் உணவு வழங்குவது பெருமிதம் மிக்க விஷயம். இன்றைக்கு நாள் முழுவதும் எதற்காக என்றே தெரியாமல் மீட்டிங்குகளில் பங்கேற்று எக்கச்சக்க மெயில்களுக்குப் பதில் போட்டு, வரும் வருமானத்தில் குடும்பத்தைக் காப்பாற்றுவதில் பெருமிதம் ஏதுமில்லை.

ஏனென்றால், அலுவலகத்தில் பல விஷயங்களை எதற்காகச் செய்கிறோம் என்றே தெரிவதில்லை. புரோட்டோகால்கள் மற்றும் பிராசஸ்களை ஏற்படுத்தி, 'சொன்னதை செய்' என்கிற ரீதியில் நாம் பின்பற்றி வாழ வேண்டியுள்ளது.

இன்றைக்கு நாம் செய்யும் வேலைகளில் பெரும்பாலானவை நமக்கு தன்னம்பிக்கையை வளர்க்க உதவும் அடித்தளத்தைத் தருவதில்லை. மனித குலம் அன்றாடம் பிழைத்திருக்க மிக மிக அவசியமானது தன்னம்பிக்கை. இது

குறித்து மேலும் தெரிந்துகொள்ள ஆய்வகங்களில் நாம் ஆராய்ச்சி செய்ய முடியாது. ஏனென்றால், இது அன்றாட வாழ்க்கையில் உபயோகிக்க வேண்டிய ஒன்று.

நடக்க முயலும் குழந்தை எப்படி முயற்சி செய்து நடந்து, விழுந்து, மீண்டும் எழுந்து என்று பல படிநிலைகளைக் கடந்து வெற்றிகரமாக நடக்கிறதோ, அதேபோல்தான் மனிதனின் தன்னம்பிக்கை பெறும் நடைமுறையும். நிஜ வாழ்க்கையில் அனுபவரீதியாக மட்டுமே புரிந்துகொண்டு உருவாக்கிக்கொள்ளக்கூடிய விஷயம் அது” என்கிறார் ஆசிரியர்.

“தன்னம்பிக்கை என்பது மற்றவர்களிடம் இருந்து நமக்குக் கிடைக்கும் ஒரு விஷயம்” என்று சொன்னால் ஆச்சரியப்படுவீர்கள். உதாரணமாக, மற்ற உயிரினங்களைப் பாருங்கள். ஒரு குழந்தை பிறந்தவுடன் நடக்கத் தொடங்கிவிடுகிறதா? சீராக நடக்க எத்தனை மாதங்கள் ஆகின்றன? ஆனால், கழுதைக் குட்டி, பிறந்த சில மணி நேரங்களில் (சில குட்டிகள் சில நிமிடங்களிலேயே) நடக்க ஆரம்பித்துவிடுகிறது. இதனால்தான் மனிதனாகிய நமக்கு தன்னம்பிக்கை அவசியமான ஒன்றாகிறது.

இயற்கையாக நம்மிடம் இருக்கும் குறைபாடுகளை நாம் சரிசெய்துகொள்ள நாம் கலாசாரத்தை சார்ந்து (குடும்பம், சுற்றியிருப்பவர்கள், கல்வி என) வாழ்கிறோம். இயற்கை நம்மை இந்த உலகில் சுயமாக வாழ முழுத் தகுதியுடன் படைக்காவிட்டாலும் நாம் அதைக் கற்றுக் கொண்டு முழுமையான மனிதனாக உருவெடுக்கிறோம். பிறந்த குழந்தை தன்னம்பிக்கையைப்பெறுவது எப்படி? சுற்றியிருக்கும் நபர்கள் காட்டும் பாசம், பரிவு, அன்பு, அவர்கள் குழந்தையின் மீது செலுத்தும் கவனம் போன்ற வற்றிலிருந்துதான்.




ஒரு குழந்தையிடம் சுற்றியிருப்பவர்கள் காட்டும் அன்பு எந்தவித நிபந்தனைகளும் அற்றதாக (Unconditional love) இருக்கிறது. அதாவது, குழந்தை குழந்தையாக இருப்பதால் மட்டுமே அன்பு கிடைக்கிறது. அது நாளை யாராக உருவெடுக்கும், அன்பு காட்டுபவருக்கு என்ன கைம்மாறு செய்யும் என்ற ரீதியில் எந்த ஓர் எதிர்பார்ப்பும் இல்லாமல் அன்பு காட்டப்படுகிறது. இதுதான் குழந்தை தன்னம்பிக்கையைப் பெற அடித்தளமாக இருக்கிறது. சுற்றியிருப்பவர்களால் அன்பு காட்டப்படுவதும் அவர்கள் உள்ளதை உள்ளபடி ஏற்றுக்கொள்வதுமாகிய இரண்டு விஷயங்களுமே ஒரு குழந்தை வளர வளர தன்னம்பிக்கையைப் பெறுவதற்குக் காரணமாக இருக்கிறது. சுற்றி இருப்பவர்கள் நம்ப மறுத்தால் குழந்தையின் தன்னம்பிக்கை வளர்ச்சி அடையாது என்கிற உண்மையை ஆராய்ச்சியாளர்கள் கண்டறிந்துள்ளனர்.

எந்த ஒரு மனிதராலும் தன்னம்பிக்கையைத் தனியாக வளர்த்துக் கொள்ள முடியாது. ஏனென்றால், தன்னம்பிக்கை என்பது முதலில் அன்பு மற்றும் நட்பு என்ற இரண்டையும் அடித்தளமாகக்கொண்ட ஒன்றாகும்.

ஒரு குழந்தையானது மிகச் சிறிய வயதிலேயே வெளி உலகத்தைக் காணத் துடிக்கும். அதைச் சுற்றியிருக்கும் பெரியவர்கள் அந்தக் குழந்தையின் ஆசையை நிறைவேற்ற நம்பிக்கையைக் கொண்டிருந்து, அதை வெளி உலகத்துடன் தொடர்பில் இருக்க வைத்தால், அதுவே தன்னம்பிக்கை வளர்ப்பதற்கு முதல்படியாக இருக்கும்.

சுயமரியாதை (Self Esteem) என்பது நம் மீது நாம் வைக்கும் மதிப்பு எனில், தன்னம்பிக்கை (ளுநடக ஊழகெனைநஉந) என்பது சிக்கல்கள் நிறைந்த இந்த உலகில் நம்முடைய மனதில் இருக்கும் சந்தேகங்களை எல்லாம் தாண்டி ஒரு விஷயத்தில் நாம் ஈடுபட்டு, ரிஸ்க்குகள் இருந்தாலுமே அந்தக் காரியத்தை மேற்கொள்வதற்கான நடவடிக்கைகளை எடுக்கும் நம் செயல்திறன் ஆகும். குறிப்பாக, வெளி உலகத்தை எதிர்கொள்ளும் தைரியத்தைப் பெற நம் மனதினுள் நாம் கொள்ளும் உள்உறுதியே தன்னம்பிக்கை ஆகும்.

தனம்பிக்கையைப் பயிற்சியின் மூலம் பெற முடியுமா? பல துறைகளிலும் இருக்கும் நிபுணர்கள் அவர்கள் ஈடுபடும் துறை சார்ந்து பெறும் கடுமையான, நீண்ட பயிற்சிகள் மூலம் தன்னம்பிக்கையைப் பெறுகின்றனர் என்கின்றன ஆய்வு முடிவுகள். இங்கே நீங்கள் கவனிக்க வேண்டியது, பயிற்சி என்பது தன்னம்பிக்கைக்காக அல்ல. துறை சார்ந்த பயிற்சி என்பதைத்தான். உடனே, ‘நான் இந்தத் துறையில் தீவிர பயிற்சி எடுத்து தன்னம்பிக்கையைப் பெற்று வெற்றியாளராகப் போகிறேன் என்று கிளம்பிவிடக் கூடாது. நீங்கள் ஈடுபடும் விஷயத்தில் உங்களுக்கு முழு ஆர்வமும் மகிழ்ச்சியும் அது உங்களுடைய மனதார்ந்த எதிர்பார்ப்பைப் பூர்த்தி செய்வதாகவும் இருக்க வேண்டும் என்பதைக் கவனத்தில் கொள்ள வேண்டும்.

தன்னம்பிக்கை என்பது சிறந்த அனுபவம், குறிப்பிட்ட தேவையான திறமைகள் மற்றும் நாம் ஏற்கெனவே பெற்றிருக்கும் வெற்றி என்ற மூன்றையும் சார்ந்தே அதிகரிக்கும் குணாதிசயம் கொண்டது.

நாம் ஏற்கனவே செய்திராத ஒரு விஷயத்தை நாம் செய்ய முயலும்போது நம்மை நாம் நம்ப வேண்டும். அப்போது தான் அந்தக் காரியத்தைச் செய்ய நாம் முயல்வோம். அந்தக் காரியத்தில் இறங்கி அதில் வெற்றி பெற்றால் என்ன அர்த்தம்? அந்தக் காரியத்தை முடிப்பதற்கான திறமை நம்மிடம் இருக்கிறது என்றுதானே? அப்படி வெற்றி பெறும்போது நம்முடைய திறமை நமக்கு நம்பிக்கையைத் தருகிறது. இதனாலேயே எந்த ஒரு விஷயத்திலும் பதற்றப்படாமல் திறமையை வளர்த்துக் கொள்ள வேண்டும். ஏனென்றால், திறனை வளர்த்தெடுத்தால் அது நமக்கு சுதந்திரத்தை அளிக்கும். இப்படி சரியான அளவில் நாம் செயல்படும்போது தன்னம்பிக்கை என்பது நம்முள் பிறக்கும்.

தன்னம்பிக்கை என்பது நாம் எடுக்கும் காரியத்தில் வெற்றி நிச்சயம் என்று நம்பிக்கை கொள்வது மட்டுமல்ல. எடுக்கும் காரியத்தில் வரும் இடர்களை எதிர்கொண்டு சமாளித்து வெற்றி பெறும் தைரியத்தைக் கொண்டிருப்பது என்பதைப் புரிந்துகொண்டு செயல்படுங்கள்” என்று கூறி முடிக்கிறார் ஆசிரியர். எந்தக் காரியத்தையும் தன்னம்பிக்கையுடன் செய்து முடித்து, ஜெயிப்பது எப்படி என்பதை சொல்லித் தரும் இந்தப் புத்தகத்தை அனைவரும் படித்துப் பயன் பெறலாம்.

# முல்லை ஓய்வு நகர்
# Mullai Rest City

எழுதுமட்டுவாழ் நகரில்
2 பரப்பு, 4 பரப்பு காணிகள் விற்பனைக்கு!


இயற்கையான சூழலில் உங்களின் ஓய்வுகாலத்தினை மகிழ்ச்சியாகவும் ஆரோக்கியத்துடனும் வாழுங்கள்!

உங்களுக்கு விரும்பியவாறு வீடுகளை அமைத்துக்கொள்ளலாம்.
மாசற்ற இயற்கையான சூழல் – பாரம்பரிய முறையிலான வாழ்க்கை – ஆரோக்கிய நிலையங்கள்
அத்தியாவசிய தேவைகள் அனைத்தும் அருகில் – பொழுதுபோக்கு அம்சங்கள்

முதியோர் பராமரிப்பு வசதி – தியான மண்டபம் – மூலிகைத்தோட்டத்துடன் மூலிகைக் குளியல்
அறிவார்ந்த நூல்கள் அடங்கிய நூலகம் – உள்ளூர் வானொலிச் சேவை
ஒன்றுகூடல் நிலையம் – பாரம்பரிய உணவகம் – பல்பொருள் அங்காடி
சுத்தமான குடிநீர் விநியோகம் – யோகா நிலையம்
விருந்தினர் விடுதி – சிறுவர் பூங்கா
ஆயுள்வேத சிகிச்சை நிலையம்
மீன்பிடி குளம் – தாரா பண்ணை
பூங்கா – நடைபயிற்சிப் பாதை – உடற்பயிற்சிக் கூடம்
உள்ளக விளையாட்டுத் தொகுதி – விளையாட்டு மைதானம்








4th Project

இது ஒரு கற்பகவனம் செயற்திட்டம்
Good Gift Property Developers (Pvt) Ltd

தொடர்புகளுக்கு: 0777 43 5557


இவ் வாரஇதழ் நல்லூர், No.68, Crossette lane, யாழ்ப்பாணத்திலுள்ள Green Media House (Pvt) Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 24.03.2024இல் வெளியிடப்பெற்றது.